**தலைப்பு 111 – சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 111 – சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஜனவரி 05 திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும், என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

அமைச்சுக்கு வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 177,059.20 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 134.779.74 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 42,279.46 மில்லியன் எனப்படும் 23.88 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டுவருவன | 137,067.50 | 111,752.06 | 25,315.44 | 18.47 |
| மூலதனம் | 39,991.70 | 23,027.68 | 16,964.02 | 42.42 |
| மொத்தம் | **177,059.20** | **134,779.74** | **42.279.46** | **23.88** |

## 2.2 முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சுக்குரிய 11101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள வாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள வாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள வாறானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 1,574.00 | 1,242.20 | 1,065.00 | 1,042.14 | 2,500.00 | 1,784.80 |

## 2.3 கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சின் கீழ் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 கட்டுநிதிக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 225.55 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கட்டுநிதிக் கணக்குகளின் இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 7002/0000/00/0100/0016/000 | 212.86 |
| 7003/0000/00/0014/0016/000 | 12.69 |
| மொத்தம் | **225.55** |

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சின் கீழ் காணப்படும் 07 பொது வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 851.90 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்குகளின் இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0111/000 | 15.85 |
| 6000/0000/00/0002/0155/000 | 38.44 |
| 6000/0000/00/0013/0108/000 | 154.71 |
| 6000/0000/00/0016/0099/000 | 625.30 |
| 6000/0000/00/0017/0027/000 | 0.01 |
| 6000/0000/00/0018/0102/000 | 12.74 |
| 6000/0000/00/0019/0024/000 | 4.85 |
| மொத்தம் | **851.90** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 பதிவேடுகளும் ஏடுகளும் பேணப்படாமை

அமைச்சினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் சில பதிவேடுகள் முறை பிரகாரம் மற்றும் நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை என என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருள் மீதான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 திகதிய ஐஏஐ/02/2002 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | பொறுப்புக்கள் மீதான பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | மின்சார உபகரணங்கள் மீதான பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | இற்றைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. |
| (v) | சேதங்கள் மீதான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | இற்றைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. |

## 3.2 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அளித்தல்

மீளாய்வாண்டின் போது அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த 22 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் கடந்த ஆண்டுகளின் போது வழங்கப்பட்டிருந்த 18 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் 2017 திசெம்பர் 01 திகதி வரை பதில் அனுப்பியிருக்காததுடன் அவ் ஐய வினாக்களுடன் தொடர்புடைய கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 27,955 மில்லியன் தொகையாக இருந்தது.

## 3.3 எல்லைகளை கடைபிடிக்காமை

விடய இலக்கம் 11101 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் கீழ் ரூபா 1,065.00 மில்லியன் இற்கான ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் நிதிப் பிரமாணங்கள் 503(1) இன் பிரகாரம் சீராக்கல் மேற்கொள்ளப்பட்ட பின்னர் எல்லையை தாக்கக் கூடியதாக உள்ளவாறான பெறுவனவுகள் ரூபா 1,042.14 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த எல்லையை ரூபா 22.86 மில்லியனால் நெருங்கியிருக்கவில்லை.

## 3.4 ஒதுக்கீட்டுக் கணக்குகள்

### 3.4.1 பேரளவில் ஏற்பாடுகள் மேற்கொண்டிருத்தல்

மீளாய்வாண்டிற்கான அமைச்சின் தலைப்பின் கீழ் அரசாங்க காணிகள் மற்றும் கட்டிடங்கள் உரித்தாக்கி மூலதனக் கிரயம் (Capital Carrying Cost of Government Land and Building) ஆகிய செலவுத் தலைப்பின் கீழ் ரூபா 17,878 மில்லியன்கள் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அது தலைப்பிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த ஏற்பாடுகளில் 10 சதவீதம் அளவினைக் கொண்டிருந்தது. அவ்வாறு செலவு விடயத்தின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த

போதிலும், அவற்றில் ஏதும் பயன்படுத்தப்பட்டிருக்காமையால் மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் சுகாதார பிரிவிற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளில் சுமார் 10 சதவீதமான தொகையொன்று பயன்படுத்தும் நோக்கமின்றி பேரளவில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

### 3.4.2 மூலதன ஏற்பாடுகளை பயன்படுத்தாமை

முறைசார் யதார்த்த வருடாந்த திட்டங்கள் தயாரிக்கப்பட்டு உகந்த மேற்பார்வையொன்றின் கீழ் செயற்படுத்தியிருக்காமை, செயற்திட்டத்தின் அடிப்படை விடயங்கள் செயற்படுத்தும் முறை பற்றி சரியான ஆய்வு ஒன்று மற்றும் குறிப்பிட்ட திட்டமொன்று இன்றி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல், உரிய பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் செயற்படாமையின் காரணமாக பெறுகைகள் விடயங்களுக்காக 2 வருடங்கள் போன்ற நீண்ட காலம் எடுத்தல், செயற்திட்டப் பிரேரணைகளை அடிக்கடி மாற்றுதல், செயற்திட்டம் மற்றும் அதன் திட்டங்களின் முன்னேற்றம் பற்றி மேற்பார்வை செய்யாமை, சிக்கல்களை இனங்கண்டு பொருத்தமான சிகிச்சைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை, எச்சந்தர்ப்பத்திலும் போதியளவு தீவிர தன்மையுடன் செயற்படாமை, செயற்திட்டங்களை திட்டமிடுவதற்கு தேவையான தரவுகள் மற்றும் வளங்களை உரிய நேரத்தில் பெற்றுக் கொடுக்காமை மற்றும் நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டுள்ள பூமியை தயாரித்து உரிய நேரத்தில் ஒப்படைத்திருக்காமை போன்ற பல்வேறு காரணங்களினால் 24 மூலதன செலவு விடங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,648 மில்லியனுக்கான ஏற்பாடுகள் முற்றாக சேமிக்கப்பட்டிருந்தன. அதே போல் கடந்த 5 ஆண்டுகளின் போது 126 செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 22,766 மில்லியனுக்கான மூலதன ஏற்பாடுகளும் முற்றாக சேமிக்கப்பட்டிருந்தது. இந்த ரூபா 28,414 மில்லியன் தொகையான ஒட்டு மொத்த சேமிப்புக்களில் ரூபா 22,403 மில்லியன் தொகை நிர்மாண வேலைகளுக்காகவும், ரூபா 2,264 மில்லியன் தொகை உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காகவும், ரூபா 147 மில்லியன் தொகை வாகனங்களுக்காகவும், ரூபா 3,600 மில்லியன் தொகை ஏனைய சுகாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காகவும் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளாகும்.

### 3.4.3 முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீண்டுவரும் மற்றும் மூலதன ஏற்பாடுகளைப் பயன்படுத்தல்

2016 திசெம்பர் 31 திகதி அளவில் மீண்டுவரும் மற்றும் மூலதன ஏற்பாடுகளை பயன்படுத்தல் முறையே 82 சதவீதம் மற்றும் 58 சதவீதம் அளவுகளில் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீண்டுவரும் மற்றும் மூலதன ஏற்பாடுகளின் பயன்பாடு முறையே 10 சதவீதத்தினால் மற்றும் 18 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

### 3.4.4 குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கங்களின் மூலம் பெற்றிருந்த ஏற்பாடுகளை வேறு செலவு விடயங்களுக்கு மாற்றுதல்

அனுராதபுரம், யாழ்ப்பாணம் மற்றும் குருநாகல் போதனா வைத்தியசாலைகளின் கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்காக குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கங்களின் மூலம் ரூபா 500 மில்லியனுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறு பெற்றிருந்த ஏற்பாடுகளின் 8 சதவீத அளவான தொகையொன்று குறிப்பிட்ட கருமங்களுக்காக பயன்படுத்தப்பட்டு மீதியாக உள்ள ஏற்பாடுகளில் ஒரு பகுதி நிதிப்பிரமாணம் 65(4)(XI) இற்கு முரணாக வேறு செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

### 3.4.5 வெளிநாட்டு மானியங்கள் மற்றும் மீளளிப்புச் செய்யக்கூடிய வெளிநாட்டுக் கடன்களின் குறை பயன்பாடு

மீளாய்வாண்டின் போது உள்நாட்டு நிதியம், வெளிநாட்டு கடன்கள், வெளிநாட்டு நிதிக் கடனை சார்ந்த உள்நாட்டு கிரயம் ஆகிய நிதியளிப்புக்களின் கீழ் மேற்கொண்டிருந்த தேறிய

ஏற்பாடுகளில் முறையே 61 சதவீதம், 56 சதவீதம், 41 சதவீதம் ஆக ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. அவை கடந்த ஆண்டின் போது முறையே 85 சதவீதம், 95 சதவீதம் மற்றும் 75 சதவீதம் ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது முறையே 24 சதவீதத்தினால், 39 சதவீதத்தினால் மற்றும் 34 சதவீதத்தினால் ஏற்பாடுகளின் பயன்பாடு குறைந்திருந்தது. எனினும் மீளளிப்பு செய்யப்படும் வெளிநாட்டு கடன் பயன்பாடு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது 48 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. வெளிநாட்டு மானியங்களில் பயன்பாடு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 7 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும் அப் பயன்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த தேறிய ஏற்பாடுகளில் 24 சதவீதமாக இருந்தது.

## 3.5 கட்டுநிதிக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சினால் 2017 ஏப்ரல் 30 ஆம் திகதியளவில் தீர்த்திருக்காத 02 கட்டுநிதிக் கணக்குகள் தொடர்பாக மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 102.91 மில்லியன் தொகையாக இருந்தது. அவற்றில் கூட்டுத்தொகை ரூபா 362,702 இற்கான மீதி 1997 ஆண்டு முதல் நிலவி வந்து காணப்பட்டது.

(ஆ) 2015 ஜூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்திய நிதிப் பிரமாணங்கள் 371(5) இன் பிரகாரம், விடயத்தை பூர்த்தி செய்து 10 நாட்களுக்குள் பெற்றிருந்த நிமித்தக் கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டுமெனினும், 608 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 24.36 தொகைக்கான நிமித்தக் கட்டுநிதி விடயம் முடிவடைந்து 01 மாதம் முதல் 13 மாதங்கள் வரை காலவீச்சில் தாமதித்த பின்னர் அந்த கட்டுநிதிகள் தீர்க்கப்பட்டிருந்தன. மேலும் 38 சந்தர்ப்பங்களில் கூட்டுத்தொகை ரூபா 1.15 மில்லியனுக்கான நிமித்தி துணைக் கட்டுநிதிகள் வழங்கியிருந்த போதிலும், 2017 ஜூலை 31 திகதி அளவில் 07 மாதங்கள் முதல் 14 மாதங்கள் வரை வீச்சில் காலம் கடந்திருந்த போதிலும், அத் திகதி வரையும் துணைக் கட்டுநிதிகளைத் தீர்த்திருக்கவில்லை.

## 3.6 பொது வைப்புக் கணக்கு

02 வருடங்களைக் மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 193.73 மில்லியனுக்கான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான இணக்கக் கூற்று

விடய இலக்கம் 11101 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இணக்கக்கூற்று தொடர்பான மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) தாபனக் கோவையின் XXIV அத்தியாயத்தில் 1.6 பிரிவின் பிரகாரம் உத்தியோகத்தர்களின் கடன்மீதி உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றவந்த திணைக்களத்தினால் உத்தியோகத்தரை விடுவித்துள்ள திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டுமெனினும் அவ்வாறு செயற்படாமையின் காரணத்தினால், 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மாகாண சபைகளுக்கு தீர்க்கப்பட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 53.88 மில்லியன் தொகையாக இருந்தது.

(ஆ) தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தில் 4.2, 4.4, 4.5, 4.6 மற்றும் 4.8 பிரிவுகளில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக 2016 திசெம்பர் 31 திகதி வரை ஓய்வுபெற்ற, இறந்த, வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த, சேவையை விட்டு விளகிய மற்றும் கூட்டுத்தாபனங்கள் சபைகளின் சேவைக்காக விடுவிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கியிருந்த ஒரு வருடத்தை விட மிகையான காலம் முதல் நிலுவையாகக் காணப்பட்டு வரும் கூட்டுத்தொகை ரூபா 34.44 மில்லியன் தொகைக்கான கடன் மீதிகள் மீளாய்வாண்டு இறுதி வரையும் அறவீடு செய்வதற்கு இயலாதுள்ளது. அவற்றில் 5 வருடங்களை விட பழமை வாய்ந்த நிலுவைக் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 19.64 மில்லியன் தொகையாக இருந்தது.

(இ) தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 11.7.1 ஆம் பிரிவின் பிரகாரம் கடன் தவணைப் பணம் மற்றும் வட்டியினை உத்தியோகத்தரின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்டு உரிய வங்கிக்கு மாதாந்தம் அனுப்பப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டின் போது 202 சந்தர்ப்பங்களில் அமைச்சுக்கு இணைக்கப்பட்டுள்ள 63 உத்தியோகத்தர்களிடம் ரூபா 0.47 மில்லியன் கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி என்பவற்றை சம்பளத்திலிருந்து கழித்திருக்கவில்லை.

**3.8 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்**

**3.8.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் 10 மாத தாமதத்தின் பின்னர் 2016 அக்தோபர் 27 திகதி தயாரித்திருந்தமையால் செயல் நடவடிக்கைத் திட்டமொன்றினை தயாரித்தலின் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**3.8.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் அமைச்சுக்கு ஒதுக்கீடு செய்திருந்த ரூபா 39,991 மில்லியனிற்கான ஏற்பாடுகளைப் பயன்படுத்தி அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட்டு வேலைகள், பண்டங்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. 2006 மார்ச் 24 ஆம் திகதி 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் பெறுகைகள் திட்டம் வருடம் ஆரம்பிக்கப்பட்ட 06 மாதங்களுக்கு பின்னர் அதாவது 2016 ஜூன் 22 ஆம் திகதி தயாரிக்கப்பட்டிருந்தமையால் திட்டத்தின் மூலம் எதிர்ப்பார்த்த குறிக்கோளினை நிறைவேற்றிக் கொள்வதற்கு அமைச்சுக்கு முடியாதுள்ளது.

(ஆ) வேலைகள், பண்டங்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சிற்கு மேற்கொண்டிருந்த ஏற்பாடுகளில் ரூபா 1,842 மில்லியன் தொகை இலங்கை தேசிய வைத்தியசாலைக்கும், ரூபா 1,837 மில்லியன் கண்டி பொது வைத்தியசாலைக்கும் மற்றும் ரூபா 136 மில்லியன் தொகை கம்பளை போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்தது. அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 4.2 வழிகாட்டல் 4.2 மற்றும் 2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம், அந்த 03 வைத்திய சாலைகளுக்கும் மீளாய்வாண்டிற்கான பிரதான பெறுகைகள் திட்டம், வருடாந்த பெறுகைகள் திட்டம் மற்றும் பெறுகைகள் கால அட்டவணை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக

தேவையினை உரிய முறையில் இனங்காணாமல் மற்றும் திட்டமொன்று இன்றி வைத்தியசாலை முகாமைத்துவத்திற்கு தேவையானவாறு பெறுகைகள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.8.3 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2002 செப்தெம்பர் 12 திகதிய 402 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம், அமைச்சினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், அவ்வறிக்கை 2017 நவம்பர் 30 திகதி வரையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை.

### 3.9 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

அமைச்சுக்கு சொந்தமான மொனறாகலை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் பயன்படுத்தப்பட்ட விபத்துகளுக்கு ஆளாகியுள்ள 41-1117, 68-1670 மற்றும் WPLW0434 இலக்கங்கள் கொண்ட 03 வாகனங்கள் மொனறாகலை பிராந்திய மருந்துக் களஞ்சிய வளவில் திறந்த நிலையில் உக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது.

(ஆ) வெளிசாராருக்கு வழங்கியிருந்த சொத்துக்கள்

அனுராதபுர போதனா வைத்தியசாலை வளவில் 528 சதுர அடி பகுதியொன்று 2007 ஆண்டு முதல் இலங்கை வங்கி கிளையொன்று நடாத்துவதற்காகவும், 2008 ஆண்டு முதல் 100 சதுர அடி பகுதியொன்று தொலைதொடர்பு நிலையமொன்று நடத்துவதற்காகவும் தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. வங்கிக் கிளை வாயு சீராக்கப்பட்டிருந்ததுடன், தொலைதொடர்பு நிலையத்தில் வெளிச்சம் மற்றும் மின்சார உபகரணங்களுக்கான மின்சாரம் வைத்திய சாலையின் மின்சார முறைமையில் இருந்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும் 2017 ஜனவரி 01 திகதி வரை அந்த இரண்டு நிறுவனங்களில் கட்டிட வாடகை, மின்சாரக் கட்டணம் மற்றும் நீர்க் கட்டணம் என்பவற்றை மீளளிப்பு செய்வதற்காக குறிப்பிட்ட வைத்திய சாலையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) வருடாந்த பண்டக் கணிப்பீடு நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 மார்ச் 31 திகதிய 05/2016 பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 வருடாந்த பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2017 ஜூன் 15 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. அமைச்சு உட்பட அதன் கீழ் காணப்படும் 112 வைத்தியசாலைகளில் மற்றும் நிறுவனங்களில் 17 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பாக அவ் அறிக்கைகள் 2017 நவம்பர் 30 திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

(ii) 2016 ஆண்டிற்கான கணிப்பீட்டு சபை அறிக்கைகளின் மூலம் சுட்டிக் காட்டியுள்ள மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட

ஏனைய விதப்புரைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.10 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 திகதியளவில் ஒரு வருடத்தை விட குறைந்த காலம் முதல் காணப்படும் அமைச்சினால் தீர்க்கப்படாதிருந்த பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 13,624 மில்லியனாக இருந்தது.

(ஆ) நிதிப் பிரமாணம் 94(1) இற்கு முரணாக 44 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் மீதியை மிகைத்து ரூபா 1,028 மில்லியனிற்கான பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தது.

## 3.11 இணக்கமின்மை

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) நியதிச் சட்ட ஏற்பாடுகள்** | | |
| 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி கூட்டிய வரிச் சட்டம் மற்றும் அதனோடு தொடர்புடைய திருத்தங்கள் | | பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்கல்களின் போது மொத்தப்பெறுமதி காலாண்டிற்கு ரூபா 3 மில்லியன் அல்லது ஒரு ஆண்டிற்கு ரூபா 12 மில்லியனை மிகைக்குமிடத்து சட்டத்தின் கீழ் வழங்குனர்கள் பெறுமதி கூட்டிய வரிக்காக பதிவு செய்யப்பட வேண்டியிருந்தது. ஏதேனும் ஒரு வழங்குனர் பெறுமதி கூட்டிய வரியிலிருந்து விடுவிக்கப்படின் உள்நாட்டு இறைவரி ஆணையாளரிடமிருந்து அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் போது கண்டி பொது வைத்தியசாலை சிரிமாவோ பண்டாரநாயக விஷேடத்துவ சிறுவர் வைத்தியசாலைக்கு பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்குனர் 02 பேர் மேற்கூறிய வரையறையை மிகைத்து பண்டங்கள் வழங்கியிருந்த போதிலும் அவர்கள் பெறுமதி கூட்டிய வரிக்காக பதிவு செய்திருக்கவில்லை எனவும் அல்லது அதிலிருந்து |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | விடுவிக்கப்பட்டிருந்தெனவும் கவனம் செலுத்தாமல் அவர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை | | | |
| (i) | XV ஆம் அத்தியாயத்தின் 9 ஆம் பிரிவு | | 31,084 | அண்மித்த 5 வருடங்களில் ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் வெளிநாட்டு சுற்றுலாவுக்காக உஷ்ண ஆடைக் கொடுப்பனவு பெற்றுக்கொள்வதற்கு உரிமை இருந்த போதிலும், அமைச்சில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவருக்கு 2014 மற்றும் 2016 இரண்டு ஆண்டுகளிலும் அக்கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) | XV ஆம் அத்தியாயத்தின் 11.1 ஆம் பிரிவு | | 2,191,795 | 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் மற்றும் கௌரவ சுகாதார போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சரின் அந்தரங்கச் செயலாளரினால் வெளிநாட்டுப் பிரயாணங்களின் போது தாபனக் கோவையின் ஏற்பாடுகளை மிகைத்து முறையான விஷேட அங்கீகாரம் ஒன்று இன்றி விமானங்களில் சிக்கன வகுப்பில் பிரயாணம் செய்யாமல் வர்த்தக வகுப்பில் பிரயாணம் செய்திருந்தனர். இதன் காரணமாக செலவிடப்பட வேண்டியிருந்த தொகையை விடக் கூடுதலாக ரூபா 2.19 மில்லியன் இற்கான மேலதிக செலவு ஒன்று மேற்கொள்வதற்கு அரசுக்கு நேரிட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>-------------------------------------------- | | |
| (i) | நிதிப் பிரமாணம் 260 | 10,157,551 | கண்டி பொது வைத்தியசாலைக்கு பண்டங்கள் மற்றும் சேவைகள் பெற்றுக் கொள்ளும் போது குறிப்பிட்ட ஒப்பந்தக்காரருக்குப் பதிலாக வேறு பெயர்களில் கொடுப்பனவு உறுதிப்பத்திரங்ள் தயாரிக்கப்பட்டு காசோலைகளின் மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதேபோல் சிரிமாவோ பண்டாரநாயக விஷேடத்துவ சிறுவர் வைத்தியசாலைக்கு பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்கியவர்களின் பெயர்களுக்கு பதிலாக வேறு பெயர்களில் கொடுப்பனவு செய்திருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (ii) | நிதிப் பிரமாணம் 751(1) | - | (i) அரச நிறுவனங்களுக்கு கிடைக்கும் அனைத்துப் பண்டங்களும் களஞ்சியத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பண்டப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு பின்னர் குறிப்பிட்ட பிரிவுகளுக்கு வழங்கப்பட வேண்டுமெனினும், கண்டி பொது வைத்தியசாலையில் தொற்றுநோய் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வழங்குனர்களிடமிருந்து கிடைக்கும் பண்டங்களை நேரடியாகவே ஏற்றுக்கொண்டு பின்னர் களஞ்சியப் பதிவேடுகளில் மற்றும் சுகாதாரம் 500 புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது.<br><br>(ii) கண்டி பொது வைத்தியசாலையின் நுகர்வுக் களஞ்சியத்திற்கு 2016 ஆண்டின் போது ரூபா 618,337 தொகை பெறுமதியான 09 நுகர்வுப் பொருள் விடயங்கள் கொள்வனவு செய்திருந்த போதிலும், அந்த பண்டங்களை இருப்பு பதிவேட்டில் பதிவு செய்யாமல் வழங்கப்பட்டிருந்தது. |

(ஈ) பொது நிதிச் சுற்றிக்கைகள்

--------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | 2014 திசெம்பர் 30 ஆம் திகதிய 03/2014 ஆம் இலக்க மற்றும் 2015 மார்ச் 10 ஆம் திகதிய 03/2014(1) ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2015 செப்தெம்பர் 10 ஆம் திகதிய NPC/9/1/30 ஆம் இலக்க தேசிய சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுச் செயலாளரின் கடிதம் | 191,970,000 | ஆரம்ப மற்றும் 11 தர மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த தொடர்பாடல் படியாக ரூபா 2,500 தொகை செலுத்த இயலுமெனினும் ரூபா 4,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் போது முறையே 12,176 மற்றும் 10,665 மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு அவ்வாறு மிகையாகச் செலுத்தியிருந்த மொத்த தொகை ரூபா 411 மில்லியன் தொகையாக காணப்பட்டது. |
| (ii) | 2015 மே 15 திகதிய 01/2015/01 ஆம் இலக்க சுற்றறிக்கை | 3,673,230 | வெளிநாட்டு பிரயாணங்கள் தொடர்பாக படிகள் வழங்குவதற்கு முன்னர் வெளிநாட்டு அரசு அல்லது வழங்கும் நிறுவனத்தினால் படிகள் வழங்கப்படுகின்றனவா என உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டு மெனினும் 03 சந்தர்ப்பங்களில் அவ்வாறு செயற்படாமல் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |

(உ) பிரதமர் அலுவலத்தின் சுற்றிக்கைகள்

--------------------------------------------

| | | |
|---|---|---|
| 1989 நவம்பர் 30 திகதிய PM/PS/5 ஆம் இலக்க சுற்றறிக்கை | 37,767,066 | கடமையின் நிமித்தம் வெளிநாட்டு பிரயாணங்களில் பங்குபற்றிய உத்தியோகத்தர்கள் மீண்டும் நாடு திரும்பிய நாளில் இருந்து 07 நாட்களுக்குள் குறிப்பிட்ட பிரயாணத்தின் மூலம் நாட்டிற்கு கிடைத்துள்ள நலன்கள், புதிய அபிப்பிராயங்கள் மற்றும் பிரேரணைகள் என்பன அடங்கிய அறிக்கையொன்று சமர்பிக்கப்பட வேண்டுமெனினும், ரூபா 37.76 மில்லியன் செலவிடப்பட்டு 20 சந்தர்ப்பங்களில் வெளிநாடுகளுக்கு சென்றிருந்த 64 உத்தியோகத்தர்களில் 11 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | உத்தியோகத்தர்கள் மாத்திரம் அவ்வாறான அறிக்கைகள் சமர்பித்திருந்தனர். |
| (ஊ) | அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவைகள் | | | |
| | (i) | வழிக்காட்டல் 2.14.1 | 25,897,193 | கண்டி பொது வைத்தியசாலை பிராந்திய பெறுகைகள் குழுவொன்றினைக் கொண்டிருந்த வைத்தியசாலை ஒன்றாக இருந்தமையால் சந்தை விலையில் உடன் கொள்வனவு செய்யும் முறையினை கடைபிடித்து ரூபா 1 மில்லியன் வரையான பண்டங்கள் மற்றும் சேவைகள் பெற்றுக் கொள்வதற்காக அந்த வைத்தியசாலைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது எனினும், அந்த வரையறையினை மிகைத்து சந்தை விலையில் உடன் கொள்வனவு செய்யும் முறையினைக் கடைபிடித்து வைத்தியசாலையின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவிற்கு குப்பை பைகள், ஏப்ரன்கள், எக்ஸ்-கதிர் மூடிகள் மற்றும் சீடீ-எம்ஆர்ஐ மூடிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 25,897,193 தொகை செலவிடப்பட்டுள்ளது. |
| | (ii) | வழிக்காட்டல் 2.8.4 மற்றும் 2.8.5 | - | கண்டி பொது வைத்தியசாலையில் தொற்றுநோய் கட்டுப்பாட்டு அலகு ஒளிக்கதிர் சுற்றெறிவுப் பகுதி மற்றும் கம்பளை போதனா வைத்தியசாலையின் சுத்திகரிப்பு அலகிற்காக மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளின் போது அவற்றின் பண்புகள் மற்றும் விவரக்குறிப்புக்களைத் தீர்மானம் செய்வதற்காக தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு ஒன்று நியமனப் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) | வழிக்காட்டல் 7.9.10 | - | சிரிமாவோ பண்டாரநாயக விஷேடத்துவ சிறுவர் வைத்தியசாலைக்கு மஞ்சல் நிற குப்பை பைகள் கொள்வனவு செய்யும் போது விவரக்குறிப்புக்களுக்கு இணங்க குறைந்த கூறுவிலைகள் சமர்பித்திருந்த நிறுவனத்தின் கூறுவிலையை இரத்துச் செய்து விவரக் குறிப்புகளுக்கு இணங்காத கூடிய விலைகள் சமர்பித்திருந்த நிறுவனம் ஒன்றில் இருந்து குப்பை பைகள் கொள்வனவு செய்வது பொருத்தம் என |

தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு தீர்மானித்திருந்தது.

(iv) வழிகாட்டல் 8.9.1 - கண்டி பொது வைத்தியசாலையில் மற்றும் சிரிமாவோ பண்டார நாயக்க விஷேடத்துவ சிறுவர் வைத்தியசாலையினால் ரூபா 500,000 தொகையின் மிகைக்கும் ஒப்பந்தங்களுக்காக உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.12 வெளிநாட்டுதவி செயற்திட்டங்கள்

வெளிநாட்டுதவி செயற்திட்டங்கள் மீதான கணக்காய்வின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

### (அ) இரண்டாவது சுகாதார பிரிவு அபிவிருத்திச் செயற்திட்டம்

சர்வதேச அபிவிருத்தி நிதியத்தினால் நிதியளிப்பு செய்யப்படுகின்ற ஐந்து ஆண்டு செயற்திட்டமொன்றாகிய இரண்டாவது சுகாதார பிரிவு அபிவிருத்தி செயற்திட்டம் 2013 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்துடன் 2018 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. 2013 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான 04 ஆண்டுகளில் ரூபா 5,584 மில்லியனுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி வரை உள்ளவாறான செலவுகள் ரூபா 2,818 மில்லியன் தொகையாக இருந்தது.

14 அரசாங்க வைத்தியசாலைகளிலுள்ள அவசர சிகிச்சை அலகுகளை புதிதாக நிர்மாணித்தலும் வேறு 14 அரசாங்க வைத்தியசாலைகளில் தற்போது காணப்படும் அவசர சிகிச்சை அலகுகளை அபிவிருத்தி செய்தலும் செயற்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாக இருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி அளவில் உள்ளவாறு புதிதாக நிர்மாணிக்கப்படும் 04 அவசர சிகிச்சை அலகுகளுக்கான ஒப்பந்த வேலைகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் தற்போது காணப்படும் 09 அவசர சிகிச்சை அலகுகளை அபிவிருத்தி செய்யும் விடயங்கள் மாத்திரம் பூர்த்தி செய்யபட்டிருந்தன.

தொற்றாநோய்களை இனங்காண்பதற்காக வயது 40 வருடங்களை விட கூடிய ஆட்களை சுகவாழ்வு நிலையங்களுக்கு செல்லும் போக்கினை மதிப்பாய்வு செய்தல் செயற்திட்டத்தின் இன்னுமொரு இலக்காக இருந்ததும் மீளாய்வாண்டின் போது சுகவாழ்வு நிலையங்களுக்கு சென்றிருந்த ஆட்களின் எண்ணிக்கையை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 251,368 இனால் குறைந்திருந்தது என வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தொற்றாநோய்களை இனங்காண்பதற்காக சுகவாழ்வு நிலையங்களுக்காக பொதுமக்களை கொண்டுசெல்வதற்காக போதியளவான விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

மீளாய்வாண்டின் போது புதிதாக சயரோக நோயாளிகள் 13,577 இனை இனங்காண்பதற்காக எதிர்பார்த்த போதிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பரிகாரத்திற்காக வசதிகளை முன்னேற்றுவதற்காக எடுத்திருந்த செயற்பாடுகள் போதியளவினதாகக் காணப்படாமையின் காரணமாக 9,293 நோயாளிகளை மாத்திரம் இனங்காணப்பட்டிருந்தனர்.

(ஆ) இலங்கை தேசிய வைத்தியசாலையில் காக்காய்வலிப்பு அலகு நிர்மாணிக்கும் விடயங்கள தாமதமாகி இருத்தல்

---

இலங்கை தேசிய வைத்தியசாலையில் 8 மாடிகள் கொண்ட காக்காய்வலிப்பு அலகு நிர்மாணித்தல் நாடு பூராகவும் காக்காய்வலிப்பு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துவதற்கான செயற்திட்டத்திற்கான மதிப்பீட்டுப் பெறுமதி 281.25 மில்லியன் சவூதி ரியால்களாகும். 2008 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த இச் செயற்திட்டத்திற்கான சவூதி அபிவிருத்தி நிதியத்திலிருந்து வழங்கியிருந்த ஒட்டுமொத்தக் கடன் தொகை 120 மில்லியன் சவூதி ரியால்களாக காணப்பட்டதுடன் செயற்திட்டம் 2016 இறுதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் இலங்கை தேசிய வைத்தியசாலை வளவில் நிறுவப்பட்டுள்ள காக்காய்வலிப்பு அலகு 2017 அக்தோபர் 24 திகதி திறக்கப்பட்டிருந்த போதிலும் 2017 நவம்பர் 30 திகதி வரை நாடு பூராகவும் காக்காய்வலிப்பு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2016 திசெம்பர் 31 திகதி அளவில் கூட்டுத்தொகை ரூபா 13.13 மில்லியன் சவூதி ரியால் கடன் தவணைப் பணமும் மற்றும் கூட்டுத்தொகை ரூபா 2.83 மில்லியன் சவூதி ரியால் வட்டித்தொகை திருப்பி செலுத்தியிருந்த போதிலும், செயற்திட்டம் தாமதமடைந்திருந்தமையால் நலன்களை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. மேலும் செயற்திட்டத்தின் குறிக்கோள்களுடன் தொடர்பில்லாத தேசிய வைத்தியசாலையின் நரம்பு அலகுக்காக மருத்துவ உபகரணங்கள் பெறுகைகளுக்காக ரூபா 337.26 மில்லியன் தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது.

## 3.13 செயலாற்றுகை

---

2016 வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் முன்னேற்றம் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) பிரதான கருமங்களுக்கு முரணான செயற்பாடுகள்

---

அமைச்சின் கீழ் காணப்படாத வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாத கலஹ பத்திராவதி தேசிய பிக்குகள் நோயாளிகள் உபசரிக்கும் நிலையத்தின் அனைத்து பராமரிப்பு விடயங்களும் பலவருட காலமாக அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு அதற்காக செலவிடப்பட்டிருந்தது. கடந்த ஆண்டின் போது மற்றும் மீளாய்வாண்டின் போதும் மாத்திரம் இதற்காக முறையே ரூபா 10.9 மில்லியன் மற்றும் ரூபா 15.1 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2014 அக்தோபர் 25 திகதிய அமப/14/1407/509/064 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இந்த நிலையத்தை மீள்கட்டமைத்து ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டரீதியான நிறுவனம் ஒன்றாக பாராளுமன்றத்தின் சட்டமொன்றின் மூலம் நிறுவுவதற்கு அமைச்சின் செயலாளர் செயற்பட வேண்டியிருந்த போதிலும், 2017 நவம்பர் 30 ஆம் திகதி வரை அந்த நிறுவனம் மீள்கட்டமைத்தல் விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தனிப்பட்ட சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தனியார் சுகாதார சேவைப் பிரிவின் மூலம் மேற்கொள்ளும் வேலைகளை முன்னேற்றுதல் மற்றும் ஒழுங்குபடுத்தும் நோக்குடன் 2007 ஆண்டின் போது தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபை நிறுவப்பட்டிருந்தது. பின்வரும் குறிக்கோள்களை நிறைவேற்றுதவற்காக 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்யும் சட்டத்தின் 19(1) மற்றும் 19(2) உபபிரிவுகளின் பிரகாரம் தனியார் மருத்துவ நிறுவனங்களுக்காக விதிகள் தயாரிக்கப்பட்டு வினைப்படுத்தவற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- பதிவு செய்யப்பட்ட தனியார் மருத்துவ நிறுவனங்களினால் பேணப்பட வேண்டிய நியமங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

- தனியார் மருத்துவ நிறுவனங்களின் நடாத்தப்பட்டு வரும் நியமங்களை மதிப்பாய்வு செய்யும் முறையொன்றினை செயற்படுத்துதல்.

- அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களினாலும் பதவியணியினர் சேர்க்கும் போது குறைந்த தகைமைகளை கடைபிடிப்பதென உறுதி வழங்குதல் மற்றும் பதவியணியினருக்கு பயிற்சி வழங்கும் போது குறைந்த நியமங்களை கடைபிடிப்பதற்கு பொறுப்பாக இருந்தல்.

- தனியார் மருத்துவ நிறுவனங்களினால் கொடுக்கப்படும மற்றும் வழங்கப்படும் நோயாளர்களைள் பேணும் சேவைகளின் தரத்தினை உறுதிப்படுத்தல்.

(ii) சட்டத்தின் 2(1) உப பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், 2007 ஆண்டின் போது பதிவு செய்யப்பட்டிருந்த தனியார் மருத்துவ நிறுவனங்களின் எண்ணிக்கை 1,747 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் அந்த எண்ணிக்கை 1,024 தொகை வரை கிரமமாக குறைந்திருந்தது. எனினும், பதிவு செய்யப்பட வேண்டிய தனியார் மருத்துவ நிலையங்களை இனங்காண்பதற்கும், பதிவு செய்விப்பதற்கும் மற்றும் பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் தொடர்பாக சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை செயற்படுத்துவதற்காக தேவையான முறையான நடைமுறையொன்று ஒழுங்குபடுத்தல் சபையினால் தயாரித்து செயற்படுத்தியிருக்கவில்லை.

(iii) 2011 ஆண்டு முதல் இந்த சபை நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்குச் சமர்பித்திருக்கவில்லை.

## 3.14 வங்கிக் கணக்குகள் நெறிப்படுத்துவதில் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சின் கீழ் காணப்படும் 14 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களினால் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயாரித்திருந்த வங்கி இணக்கக்கூற்றுக்களின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் வங்கிக்கு சமர்பிக்கப்படாமல் காணப்படும் 06 மாதங்களை விட கூடிய காலம் கடந்துள்ள கூட்டுத்தொகை ரூபா 1.02 மில்லியன் தொகைக்கான 74 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்கள் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) அமைச்சின் கீழ் காணப்படும் 02 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களினால் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயாரித்திருந்த வங்கி இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட்டிருந்த போதிலும் இனங்காணப்படாத ரூபா 130,602 தொகை மீளாய்வாண்டு இறுதி வரை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.15 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------------------

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறைசார் விதமாக அன்றி காணப்பட்டது. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) புற்றுநோயாளிகளுக்கு வழக்கிழந்துள்ள கொபோல்ட் (Cobalt) சிகிச்சை முறைக்கு பதிலாக அதிசக்தி ஒளிக்கதிர் சுற்றெறிவு முறையை அறிமுகப்படுத்துவதற்காக 2012 ஆண்டின் போது 53.38 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான செயற்திட்டமொன்றிற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. 10 வைத்தியசாலைகளில் 02 கட்டங்களின் கீழ் செயற்படுவதற்காக திட்டமிட்டிருந்த இச் செயற்திட்டத்திற்கு நிதியளிப்புச் செய்வதற்காக வெளிநாட்டு வங்கி ஒன்றினால் சுயவிருப்பத்தின் பிரகாரம் பிரேரணை ஒன்று (unsolicited proposal) சமர்பித்திருந்த போதிலும் சமர்பித்திருந்த கடன் நிபந்தனைகளுக்கு சம்மதம் தெரிவிப்பதை திறைசேரியினால் மறுக்கப்பட்டிருந்தது.

எனினும் உலக வங்கிக் கடன் உதவி மற்றும் உள்நாட்டு நிதியங்களின் மூலம் நிதி ஏற்பாடுகள் செய்யப்பட்டு பெறுகைகள் செயற்திட்டத்திற்கு புறமாக செயற்பட்டு, திறைசேரியினால் மறுக்கப்பட்ட பிரரேணையில் காணப்படும் கூறுவிலைகளுக்கு மற்றும் அதே வழங்குனரிடம் 04 அதிசக்தி ஒளிக்கதிர் சுற்றறிப்பு உபகரணங்கள் (Linear Accelerator) அவற்றின் கிரயத்தில் 80 சதவீதம் ஆகிய 8.8 மில்லியன் அமெரிக்க டொலரினைச் செலுத்தி கொள்வனவு செய்திருந்ததுடன் இயந்திரத்தை பொருத்திய பின்னர் மீதியான 20 சதவீதத்தினைச் செலுத்துவதற்கு இணங்கியிருந்தனர்.

05 வைத்தியசாலைகளில் ஒளிக்கதிர் சுற்றெறிவு உபகரணத்தை பொறுத்துவதற்காக தேவை பதுங்குகுழிகள் நிர்மாணிப்பதற்காக வடிவமைத்து நிர்மாணிக்கும் அடிப்படையில் ரூபா 1,103 மில்லியன்களுக்கான ஒப்பந்த வேலை பெறுகைகள் நடைமுறையில் இருந்து விளகி மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு மீதான மத்திய உசாத்துணை பணியின் 2014 ஜூன் 11 திகதி வழங்கப்பட்டிருந்தது. 2015 ஏப்ரல் மாதம் அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிர்மாண வேலைகள் 2017 ஆகஸ்ட் 01 திகதி வரை பூர்த்தி செய்திருக்காததுடன் 2 வருடத்தை விட கூடிய காலம் தாமதமாகியிருந்தது.

பதுங்கு குழிகள் நிர்மாணிப்பதற்கு தாமதம் காரணமாக இந்த 04 இயந்திரங்களில் 03 உம் ஒரு வருடத்திற்கு மிகையான காலம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(ஆ) கறை நிரலிற் சேர்க்கப்பட்டிருந்தென மற்றும் வங்கி பிணைமுறி சமர்பித்திருக்கவில்லை என்ற போலியான காரணங்களை காட்டி குறைந்த கூறுவிலைகள் சமர்பித்திருந்த இரண்டு ஒப்பந்தக்காரர்களும் தகைமையற்றவர்கள் என தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினால் விதந்துரைக்கப்பட்டு அநுராதபுர போதனா வைத்தியசாலையின் மின்சார முறைமையின் பராமரிப்பு மற்றும் சேவை செய்வதற்காக குறைந்த வீலையை விட ரூபா 65,000 தொகையினால் கூடிய மாதாந்த கட்டணத்தை சமர்பித்திருந்த ஒப்பந்தக்காரர் தகையையுடையவர் என விதந்துரைக்கப்பட்டிருந்தது. அதேபோல் 17 வருட காலப்பகுதியில் தொடர்ச்சியாக ஒப்பந்தக்காரருக்கு இந்த ஒப்பந்தவேலை சாட்டப்பட்டிருந்ததுடன் 2012 – 2016 ஐந்து வருட காலப்பகுதியில் நபர்கள் குழுவொன்று தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அங்கத்தவர்களாக நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

(இ) 2013 ஆண்டின் போது ரூபா 3,058,952 தொகை செலவிடப்பட்டு இலங்கை தேசிய வைத்தியசாலையின் நவலோக அருவை சிகிச்சை நிலையத்திற்காக Flexible Ureter

Scope உபகரணம் ஒன்று கொள்வனவு செய்திருந்ததுடன் அந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரச பெறுபேறுகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 5.2.1(அ) இன் பிரகாரம், இந்த பெறுகைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட விலைகூறல் அழைப்புப் பதிவேடுகள் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் அதற்கு பதிலாக தயாரிக்கப்பட்டிருந்த விலைகூறல்கள் அழைப்பு பதிவேட்டில் விலைகூறல்தாரருக்கு விலைகூறல்களை தயாரிப்பதற்கு தேவையான அனைத்து தகவல்களும் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் விலைகூறல் சமர்பிக்கும் சந்தர்ப்பங்கள் வரையறுக்கப்பட்டிருந்ததுடன் 03 விலைகூறல்கள் மாத்திரம் சமர்பிக்கப்பட்டிருந்தது.

(ii) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 2.8.1(ஆ) வின் பிரகாரம், விடயம் தொடர்பாக விஷேடத்துவர் என உயிரியல் மருத்துவ பொறியியலாளர் ஒருவர் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு அங்கத்தவர் ஒருவராக நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) கூறுவிலை அழைப்புப் பதிவேட்டில் தேவையான விவரக் குறியீடுகள் உட்படுத்தி இருக்காததுடன் விலைகூறல்களை மதிப்பாய்வு செய்யும் போது உபகரணத்தின் நெகிழ்வுத் தன்மையுடையது என்பதை மாத்திரம் கவனம் செலுத்தி மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iv) 2013 செம்தெம்பர் 13 திகதி வைத்தியசாலைக்கு கிடைத்திருந்த இந்த உபகரணத்தின் மூலம் 2013 அக்தோபர் 24 திகதி முதல் 2015 மே 27 வரை 18 பரிசோதனை மாத்திரம் நடத்தப்பட்டிருந்ததுடன் 2015 மே 27 திகதி அளவில் உபகரணம் செயலிழந்துள்ளது. உபகரணம் செயலிழந்துள்ளது என 01 வருடமும் 06 மாதங்கள் கடந்த பின்னர் வழங்குனருக்கு அறிவித்திருந்ததுடன் மேலும் 07 மாதங்கள் கடந்த பின்னர் 2017 ஜுன் 23 திகதி இந்த உபகரணத்தை வழங்குனருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. உபகரணத்தை பழுதுபார்ப்பதற்காக பாரிய தொகை ஒன்று செலவாகுமெனக் கூறி ரூபா 1,592,600 தொகைக்கான பரிமாற்றப் பெறுமதிக்கு தற்போது இருக்கும் உபகரணத்தை புதிய உபகரணத்திற்கு பறிமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன் அந்த புதிய உபகரணம் 2017 நவம்பர் 15 திகதி வைத்தியசாலைக்கு கிடைத்திருந்தது. எவ்வாறாயினும் 2016 ஜுன் 14 திகதி ரூபா 2,055,000 தொகை செலவிடப்பட்டு Flexible Ureter Scope உபகரணமொன்று வேறு ஒரு கம்பனியில் இருந்து கொள்வனவு செய்திருந்தமையால் இந்த புதிய உபகரணத்திற்கு சராசரி சந்தை விலையை மிகைத்து ரூபா 2,596,552 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(v) 2016 ஜுன் 14 திகதி ரூபா 2,055,000 தொகை செலவிடப்பட்டு Flexible Ureter Scope உபகரணமொன்று வேறு கம்பனி ஒன்றிலிருந்து கொள்வனவு செய்திருந்த போதிலும் அந்த உபகரணமும் 16 மாதங்கள் ஆகிய குறுகிய காலத்தில் செயற்படாமல் இருந்தது என வெளிப்படுத்தப்பட்டது.

(vi) இந்த 02 உபகரணங்களும் செயற்படாமையால் இந்த உபகரணங்களின் மூலம் சேவையினைப் பெற்றுக்கொள்ளும் சிறுநீரக நோயாளிகள் பாரிய எண்ணிக்கையானவர்கள் 2017 அக்தோபர் 13 திகதி அளவில் எதிர்பார்ப்பு பதிவேட்டில் இருப்பதாக அவதானிக்கப்பட்டது.

(ஈ) இலங்கை தேசிய வைத்தியசாலையின் தீவிரசிகிச்சை அலகுகளில் பயன்பாட்டிற்காக ரூபா 37,660,000 தொகை செலவிடப்பட்டு 14 ICU VENTILATORS கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்தக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் இலக்கம் 4.2.3 இன் பிரகாரம், ரூபா 5 மில்லியன் முதல் ரூபா 25 மில்லியன் வரையான பெறுகைகளுக்கான விலைகூறல் பதிவேடுகளை பரிசோதனை செய்தல் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அங்கீகாரத்தில் இருந்து ஒப்பந்த வேலையை வழங்கும் சந்தர்ப்பம் வரை பெறுகைகள் செயற்பாடுகளுக்காக எடுக்க வேண்டிய காலம் 12 வாரங்களாகக் காணப்பட்ட போதிலும் இந்த பெறுகைகளை இரண்டு பகுதிகளாக பிரித்திருந்த காரணத்தினால் 30 வாரங்கள் மற்றும் 36 வாரங்கள் காலம் ஒன்று கடந்துள்ளது.

(ii) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 2.6.1(அ)(II) இன் பிரகாரம், விவரக்குறிப்பு இயற்கையாகவே உருவாக்கப்பட்டவை எனவும் சமமான மட்டத்தில் போட்டித் தன்மையானவை எனவும் மேம்படுத்தக்கூடியதாகவும் உள்ளது எனவும் சான்றுபடுத்துவதற்காக விவரக் குறிப்புக்களை மீளாய்வு செய்வதற்கும் மற்றும் அங்கீகரிக்கப்பட்டு பெறுகைகள் குழுவிற்கு சமர்பிப்பதற்கு தொழில்நுட்ப மதிப்பாய்வுக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 2.11.1(இ) இன் பிரகாரம், பெறுகைகள் கால அட்டவணை, பெறுகையின் முறை, விலைகூறல் அழைப்புப் பதிவேடுகளின் வகைகள் தொடர்பாக இணங்குவதற்காக பெறுகைகள் குழுவின் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் ஒன்றினைந்த ஆரம்ப கூட்டம் ஒன்று நடாத்தியிருக்கவில்லை.

(iv) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 2.11.3 இன் பிரகாரம், பெறுகைகள் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு அறிக்கைகள் குறிப்பிட்ட படிவம் ஒன்றின் பிரகாரம் அறிவித்திருக்கவில்லை.

(v) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 2.12 இன் பிரகாரம் பெறுகைகள் குழுவின் உறுப்பினர்கள், தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு உறுப்பினர்கள் மற்றும் எழுதுனர் உத்தியோகத்தர்களினால் இரகசியத் தன்மையை வெளிப்படுத்ததும் படிவத்தை பூர்த்தி செய்திருக்கவில்லை.

(vi) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்ல் 6.3.6 இன் பிரகாரம் விலைகூறல் திறத்தல் தொடர்பாக விடயங்களை உரிய படிவமொன்றில் பதியப்பட்டிருக்கவில்லை.

(vii) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையில் வழிகாட்டல் 7.8 இன் பிரகாரம் விலைகூறல்கள் பரிசோதனைகள் மேற்கொள்ளல் பொதுவான கோட்பாட்டின் கீழ் விலை கூறல்களை பரிசோதனை செய்யும் முதல் கட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(viii) குறிப்பிட்ட தரவுத் தாளில் (Data Sheet) அல்லது பெயர் பட்டியல் வரிசையில் (Catalogue) அல்லது குறிப்பிட்ட தொழில்நுட்ப விவரக் குறிப்புகளின் தொடர்

இலக்கத்தை பதித்து அடையாளப்படுத்தியிருக்காமை தொடர்பாக கவனம் செலுத்தாமல் விலைகூறல்களுக்கான மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ix) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 8.9.1(ஆ) இன் பிரகாரம், உடன்படிக்கையொன்று எழுதி கையொப்பமிட்டிருக்கவில்லை.

(x) 2017 மே 03 திகதி கட்டளை அனுப்பப்பட்டிருந்த 07 உபகரணங்கள் மாத்திரம் கட்டளையிலுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் வழங்கியிருந்த போதிலும், அத் திகதியில் கட்டளை அனுப்பப்பட்டிருந்த மீதியினை 07 உபகரணங்களும் 2017 நவம்பர் 06 திகதி வரையும் வழங்கியிருக்கவில்லை. தாமதக் காலம் 16 வாரங்களைக் கடந்திருந்த போதிலும் தாமதக் கட்டணம் அறவீடு செய்யும் நிபந்தனை கட்டளையில் உட்படுத்தியிருக்காமையால் தாமதக் கட்டணம் அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

## 3.16 கட்டிட நிர்மாண வேலை செயற்திட்டங்கள்

சுகாதார, போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 2016 ஆண்டு இறுதியளவிலும் செயற்படுத்தப்பட்டு காணப்பட்ட கட்டிட நிர்மாண வேலை செயற்திட்டங்களின் எண்ணிக்கை 40 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் மேல் மாகாணத்தில் நிர்மாணிக்கப்பட்டும் கட்டிடங்களின் எண்ணிக்கை 15 ஆக இருந்தது. இந்த 15 நிர்மாண வேலை செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மேல் மாகாணத்தில் செயற்படுத்தப்படும் 15 நிர்மாணவேலை செயற்திட்டங்களில் ரூபா 175 மில்லியன் முதல் ரூபா 3,897 மில்லியன் வரையான பொறியியல் மதிப்பீட்டு பெறுமதியுடனான 09 செயற்திட்டங்களுக்காக பிரதான பொறியியலாளர் உட்பட 09 பொறியலாளர்கள் இணைக்கப்பட்டிருந்தனர். அமைச்சில் அமைந்துள்ள வழங்கள் பிரிவின் (Logistic division) மேற்பார்வைக்காக மற்றும் நிருவாகத்தின் கீழ் அந்த செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. மீதியான 6 செயற்திட்டங்கள் பொறியியல் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 543 மில்லியன் முதல் ரூபா 4308 மில்லியன் வரை வீச்சிலான தொகையைக் கொண்டிருந்தது. அந்த 06 செயற்திட்டங்களுக்காக பொறியியலாளர்கள் இணைக்கப்பட்டிருக்காததுடன் வேறு பிரிவுகளின் மேற்பார்வை மற்றும் நிருவாகத்தின் கீழ் அந்த செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தது. கட்டிடங்கள் நிர்மாணிக்கும் செயற்திட்டங்கள், பொறியியலாளர்களின் மேற்பார்வையின் மற்றும் நிருவாகத்தின் கீழின்றி செயற்படுத்துவதற்கு இயலுமான முறையில் வழங்கல் பகுதிக்கு புறம்பாக வேறு பிரிவுகளுக்கு சாட்டுதல் மேற்கொள்ளப்பட்ட அடிப்படை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

(ஆ) தேசிய பெறுகைகள் முகவராண்மையினால் நியமனம் செய்யப்பட்டிருந்த தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் விதப்புரை மற்றும் அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்ட அமைச்சரவை பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்தின் பிரகாரம், வைத்திய வழங்கள் பிரிவிற்காக 02 ஆம் இலக்க களஞ்சியம் அங்கொடை பிரதேசத்தில் நிர்மாணிக்கும் ஒப்பந்த வேலை ரூபா 126,276,118 தொகைக்கான வரி இன்றிய ஒப்பந்த விலைக்கு தனியார் கம்பனி ஒன்றிற்கு 2008 மே 29 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்த வேலை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒப்பந்த உடன்படிக்கையில் பிரகாரம், 2009 ஜூன் 25 திகதி நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2008 மற்றும் 2009

ஆண்டிகளின் போது போதியளவு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்றின் பிரகாரம் மற்றும் முறையான மேற்பார்வையுடன் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்படாமையினால் 07 வருடங்களை விட மிகையான காலம் தாமதிக்கப்பட்டு 2016 திசெம்பர் 31 திகதி அளவில் அந்த நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

(ii) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 8.14 இன் பிரகாரம், ஒப்பந்தக்காரரின் கட்டுப்பாட்டில் இல்லாத காரணங்களினால் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற காரணங்களினால் ஒப்பந்த வேலை தாமதித்ததென எழுத்துமூல சான்றுகள் ஏதும் இன்றி 2013 மே 15 ஆம் திகதி முதல் 2014 செம்தெம்பர் 15 திகதி வரையான 01 வருடம் 04 மாதங்களினால் ஒப்பந்தக் காலம் நீடிக்கப்பட்டிருந்தது.

(iii) ஒப்பந்த வேலையின் உசாத்துணை நிறுவனமாகிய மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத் (CECD) தினால் இந்த ஒப்பந்த வேலைகள் தாமதமாக நடப்பதாகவும் வேலைகள் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகவும் செயலாற்றுகை குறைந்த மட்டத்தில் காணப்படுவதாகவும் அமைச்சுக்கு அறிவித்திருந்த போதிலும், இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(vi) நிர்மாண வேலைகள் தாமதிக்கப்பட்ட காரணத்தினால் ஒப்பந்தக்காரருக்கு விலை முரண்களுக்காக ரூபா 5.32 மில்லியன் தொகையும், ஆலோசனை நிறுவனத்திற்கு மேலதிக ஆலோசனை கட்டணமாக ரூபா 11.75 மில்லியன் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

(v) நிர்மாண வேலை விடயங்கள் முதலாவது ஒப்பந்தக்காரரினால் இடை நிறுத்தப்பட்டிருந்ததென 2013 நவம்பர் 01 திகதி ஆலோசனையாளரினால் அமைச்சுக்கு அறிவித்திருந்தது. செயலாற்றுகை பிணைமுறி 2014 மே 31 திகதி காலவதியாகியிருந்ததுடன் அதற்கு முன்னர் அதனை காசாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(vi) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நிறைவேற்றபடாத வேலைப் பெறுமதியின் 20 சதவீதம் ஒப்பந்தக்காரரிடம் அறவீடு செய்வதற்கும், தாமத காலத்திற்காக ஒரு நாளைக்கு ரூபா 5,000 வீதம் தாமதக் கட்டணம் அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.17 நிதி ஒழுங்கீனத் தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கான உயிர் இரசாயனவியல் பகுப்பாய்வு சார்ந்த உபகரணமொன்று (Bio – Chemistry) 2012 அக்தோபர் மாதத்தில் ரூபா 4,011,358 இற்கு கொள்வனவு செய்து 2012 அக்தோபர் 24 திகதி சிறுநீரக ஆய்வுகூடத்தில் (Renal Lab) இல் பொருத்தப்பட்டிருந்தது. அந்த உபகரணங்களின் உத்தரவாதக் காலம் 2004 செப்தெம்பர் 08 திகதி காலவதியாகியிருந்ததுடன் அந்த உபகரணத்திற்காக வழங்கியிருந்த கைநூலும் 2008 ஆண்டின் போது வழங்கியிருந்த ஒன்றினை அவதானிக்கப்பட்டது. வழங்குனரினால் இந்த உபகரணம் 2010 – 2013 இடைப்பட்ட காலப்பகுதியில் இறக்குமதி செய்திருந்ததென சுங்க திணைக்களத்தால் உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முடியாதிருந்தமையால் அவ உபகரணங்கள் வியாரக்

குறியுடனான (Branded) ஒன்றல்லாமல் சேர்த்துபொருத்திய உபகரணம் ஒன்றென உறுதிப்படுத்தப்பட்டது.

(ஆ) தேவையினை விவரக்குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள உயரம் மற்றும் அகலம் என்பவற்றை கொண்டிருக்காத குப்பை பைகல் கண்டி பொது வைத்தியசாலையினால் வழங்குனரிடம் பெற்றுக்கொண்டிருந்தனர். அதன் பிரகாரம், வழங்கியிருந்த குப்பைப் பைகளின் உயரம் மற்றும் அகலத்திற்கேற்ப செலுத்த வேண்டிய தொகையை விட ரூபா 5,123,531 தொகை வழங்குனருக்கு மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) கண்டி பொது வைத்தியசாலையின் தொற்றுநோய் கட்டுப்பாட்டு அலகில் இருப்புப் புத்தகத்தின் பிரகாரம் 2017 ஜனவரி 31 திகதியில் உள்ளவாறு ஏப்ரன் இருப்பு மீதி 44,838 அலகுகள் என காட்டப்பட்டிருந்த போதிலும், அத்திகதியில் உள்ளவாறு ஏப்ரன் இருப்பு 139,903 அலகுகள் என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் களஞ்சிய பதிவேட்டில் ஏப்ரன் இருப்பு மீதி 95,065 அலகுகளினால் குறைவாக இருப்பு பதிவேடு சமப்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) கண்டி பொது வைத்தியசாலையின் பண்டங்கள் கொள்வனவு செய்யும் பெறுகைகள் தொடர்பாக 04 வழங்குனர்கள் விலைகூறல்களை தனித்தனியாக சமர்பித்திருந்தனர். அந்த விலைகூறல்தாரர்கள் நால்வரின் கூறுவிலைகளும் ஒரே வழங்குனரினால் போலியான முறையில் சமர்பித்திருந்ததென வெளிப்படுத்தப்பட்டது. அதேபோல் சிரிமாவோ பண்டாரநாயக விஷேடத்துவ சிறுவர் வைத்தியசாலைக்கு குப்பை பைகள் வழங்குவதற்காக 03 வழங்குனர்கள் தனித்தனியாக விலைகூறல்கள் சமர்பித்திருந்த போதிலும், 03 பேரின் கூறுவிலைகளை ஒரே வழங்குனரினால் போலியான முறையில் சமர்பித்திருந்ததென வெளிப்படுத்தப்பட்டது.

(உ) கண்டி பொது வைத்தியசாலையின் ஒளிக்கதிர் சுற்றெறிவுப் பகுதிக்காக ரூபா 1,416,000 தொகை பெறுமதியான 48,000 தொகையான CT – MRI உறைகள் கொள்வனவு செய்து 15,000 உறைகள் அப்பிரிவிற்கு வழங்கப்பட்டது என பிரதான களஞ்சியத்தில் இருப்புப் புத்தகத்தில் பதிவு செய்திருந்த போதிலும், அப்பிரிவுக்கு 5,000 உறைகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததென பண்டங்கள் வழங்குவதற்கு பயன்படுத்தப்படும் சுகாதாரம் 500 ஏட்டினை பரிசோதனை செய்த போது அவதானிக்கப்பட்ட காரணத்தினால் வழங்கப்படாதிருந்த 10,000 உறைகளின் மொத்தக் கிரயம் ரூபா 295,500 ஆக இருந்தது.

(ஊ) கண்டி பொது வைத்தியசாலையின் முன்னைய களஞ்சிய பொறுப்பு உத்தியோகத்தரினால் புதிதாக நியமனம் செய்யப்பட்டிருந்த களஞ்சிய பொறுப்பு உத்தியோகத்தருக்கு CT – MRI உறைகள் 10,000 ஒப்படைக்காதிருந்ததுடன் அவற்றின் மொத்த கிரயம் ரூபா 29,500 தொகையாகும்.

(எ) கண்டி பொது வைத்தியசாலையில் ஒளிக்கதிர் சுற்றெறிவு பிரிவிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,749,000 தொகை பெறுமதியான 66,000 X – RAY பைகள் பிரதான களஞ்சியத்தில் இருந்து ஒளிக்கதிர் சுற்றெறிவு பிரிவிற்கு வழங்கப்பட்டதென இருப்பு புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், ரூபா 160,325 தொகை பெறுமதியான 6050 பைகள் குறைவாக வழங்கப்பட்டிருந்ததென பண்டங்கள் பெற்றுக்கொள்வதற்காக ஒளிச் சுற்றெறிவு பிரிவினால் பயன்படுத்தப்படும் சுகாதாரம் 500 ஏட்டினை பரிசோதனை செய்த போது வெளியிடப்பட்டது.

(ஏ) 2015 நவம்பர் 11 திகதி கண்டி பொது வைத்தியசாலையின் நுகர்வுப் பொருட் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த கினிசப்பு, டூனா பலகை, சலாகைகள், கம்புகள் மற்றும் ஒட்டுப்பலகை மர வகைகள், தச்சு வேலைப்பகுதிக்கு வழங்கப்பட்டதென

களஞ்சியப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ரூபா 210,124 தொகை கிரயத்தையுடைய பலகைகள் வழங்கியிருக்கவில்லை என தச்சு வேலை பிரிவினால் பண்டங்கள் பெற்றுக்கொள்ளும் சுகாதாரம் 500 ஏட்டை பரிசோதனை செய்த போது அவதானிக்கப்பட்டது.

(ஐ) கண்டி பொது வைத்தியசாலையின் தொற்றுநோய் கட்டுப்பாட்டு அலகின் களஞ்சியத்தில் ரூபா 425,628 தொகை கிரயத்தையுடைய நான்கு வகையான குப்பை பைகள் 26,580 அலகுகள் மிகையாகவும் மற்றும் ரூபா 4,244,932 தொகையான கிரயத்தையுடைய ஐந்து வகையான குப்பைப் பைகள் 185,025 அலகுகளுக்கான பற்றாக்குறையும் காணப்பட்டதென 2017 ஏப்ரல் 26 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

**3.18 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 16 பிரிவின் பிரகாரம் அநுராதபுர போதனா வைத்தியசாலையின் மருத்துவரொருவர் 2012 ஜனவரி 01 திகதி முதல் 2012 திசெம்பர் 31 திகதி வரையான ஆண்டிற்காக ரூபா 250,760 இற்கான பிணைமுறி ஒன்றின் மீது வெளிநாடு சென்றிருந்தார். சம்பளமின்றி ஒரு வருட காலத்திற்கு வெளிநாடு செல்வதற்காக அங்கீகரித்திருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 ஆம் திகதி வரை வருடாந்தம் 04 சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட மருத்துவரின் வேண்டுகோளின் பேரில் விடுமுறை காலம் நீடிக்கப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 திகதியின் பின்னர் வெளிநாட்டு விடுமுறை அனுமதிக்கப்படாதிருந்த போதிலும், குறிப்பிட்ட மருத்துவர் 2017 பெப்ரவரி 06 திகதி வரை சேவைக்கு வந்திருக்கவில்லை. அவ்வாறாயினும் அவரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,180,662 தொகை அவரிடம் அல்லது அவரது பிணையாளரிடம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணங்கள் 715(2)(ஆ) இன் பிரகாரம் எந்த சந்தர்ப்பத்திலும் பண்டங்களின் இருப்பினைச் சரிபிழை பார்ப்பதற்கு ஏற்ற வகையில் முறைசார் விதமாக, ஒழுங்குமுறைப்படி பண்டங்கள் அடுக்கப்பட்டு களஞ்சியங்களில் பேணப்பட வேண்டியிருந்தது. கண்டி பொது வைத்திய தொற்றுநோய் கட்டுப்பாட்டுப் பிரிவினால் பேணப்படுகின்ற களஞ்சியத்தில் பண்டங்கள் ஒவ்வொரு இடத்திலும் முறையற்ற விதமாக குவிக்கப்பட்டுக் காணப்பட்டதுடன், குப்பை பைகள் மற்றும் ஏப்பிரன்கள் பாரிய இருப்பு ஒன்று பயன்படுத்த முடியாத விதமாக எலிகளினால் அழிக்கப்பட்டிருந்தன. இந்த சேதங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 இன்ப பிரகாரம் அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) கம்பளை போதனா வைத்தியசாலையின் சுத்திகரிப்பு சேவைக்காக சேவை வழங்கும் நிறுவனத்துடன் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் குப்பைகள் அகற்றப்படும் பெரிய மற்றும் சிறிய அளவிலான 4,750 கறுப்புப் பைகள் வழங்குவதற்காக ரூபா 54,000 அந்த நிறுவனத்திற்கு மாதாந்தம் செலுத்தப்பட்டிருந்தது. 2016 ஜனவரி முதல் 2017 ஜூன் வரை வைத்தியசாலையினால் 93,935 குப்பை பைகள் நுகரப்பட்டிருந்ததுடன், அவற்றில் 85,500 பைகள் சுத்திகரிப்பு பகுதியினால் வழங்கப்பட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் வைத்தியசாலையினால் 8,435 குப்பை பைகள் மாத்திரம் வழங்க வேண்டி இருந்த போதிலும், அத்தொகை மிகைத்து ரூபா 280,174 தொகைக்கான 36,865 குப்பைப் பைகள் மிகையாக வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) நிதிப்பிரமாணங்கள் 763 இன் பிரகாரம், உரிய முறையில் பாதுகாப்பு முறைகள் கடைபிடிக்காமல், குண்டசாலை வராபிடிய மருத்துவ வழங்கள் உப களஞ்சியத்தில் இருப்புக்கள் களஞ்சியப்படுத்தப்பட்டமையால் ரூபா 42,671 தொகை பெறுமதியான Dextrose 5% m/500 ml 787 போத்தல்கள் எலிகளினால் அழிக்கப்பட்டிருந்தன.

(உ) 2016 ஜூன் 08 திகதி முதல் 2016 ஜூன் 17 திகதி வரையான காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்க நிவ்யோக் நகரில் நடைபெற்றிருந்த எச்ஐவீ/எய்ட்ஸ் தொடர்பான மாநாட்டில் பங்கு கொள்வதற்காக ரூபா 991,000 தொகை செலவிடப்பட்டு விமான பிரயாணச் சீட்டு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் பின்னர், அதனை இரத்துச் செய்த காரணத்தினால் திருப்பி அறவிடப்பட்ட தொகை ரூபா 894,528 தொகை மாத்திரமாக இருந்தது. இதனால் ரூபா 96,472 நட்டம் ஒன்று வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதேபோல் 2016 செம்தெம்பர் 19 திகதி முதல் 2016 செப்தெம்பர் 23 திகதி வரையான காலப்பகுதியில் சிங்கப்பூரில் நடைபெற்ற Course on health policy and the Role of date of Technology in Healthcare எனப்படும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றில் பங்குபற்றுவதற்காக ரூபா 38,500 தொகை செலவிடப்பட்ட விமானப் பிரயாணச்சீட்டு ஒதுக்கியிருந்த போதிலும், குறிப்பிட்ட உத்தியோகத்தர் பிரயாணத்தில் பங்கு பற்றாமை காரணமாக ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 38,500 தொகையாகும். இந்த பணம் பொறுப்பு சொல்லவேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறிவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) கண்டி பொது வைத்தியசாலையின் நுகர்வுப் பொருட்கள் களஞ்சியப்படுத்தல் பேணப்படுகின்ற இருப்பு பதிவேடுகளின் மீதிகளை புதிய பதிவேடுகளில் பதிவு செய்யும் போது ரூபா 289,286 தொகை பெறுமதியான 10 விடயங்களில் வித்தியாசங்கள் காணப்பட்டன.

### 3.19 மருத்துவ வழங்கள் பிரிவு

மருத்துவ வழங்கல் பிரிவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மருத்துவப் பட்டியல்கள் மீளாய்வுக் குழுவின் விதப்புரையொன்று இன்றி மருந்து வழங்கல் கொள்வனவு செய்யக் கூடாது என அமைச்சரவை தீர்மானித்திருந்த போதிலும் பயன்படுத்தப்பட்டு காணப்படும் 16,638 விடயங்களில் 4,619 மருத்துவ வழங்கள் விடயங்கள் அதாவது, 27.8 சதவீதம் அந்த குழுவின் அங்கீகாரம் இன்றி பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மருத்துவ வழங்கள் பிரிவினால் மதிப்பீடு செய்யப்பட்ட விடயமொன்றினை கொள்வனவு செய்வதற்காக 11 மாத வழங்கல் காலத்துடன் அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு கட்டளைகள் வழங்குதல் கொள்கையாக இருந்தது. எனினும், தாமதமின்றி மருத்துவ வழங்களை பெற்றுக்கொடுப்பதற்கு அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு இயலாதிருந்தது. 2016 ஆண்டிற்கான மருத்துவ வழங்கள்களில் மொத்த கட்டளை விடயங்களின் எண்ணிக்கை 8,384 தொகையாக இருந்ததுடன், அவற்றில் கட்டளை விடயங்கள் 5,178 தொகை எனப்படும் 62 சதவீதம் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கியிருக்கவில்லை. இந்த தாமதத்தின் காரணமாக எல்லா ஆண்டுகளிலும் மிகவும் விசாலமான கிரயத்தையுடைய மருந்துவகை வழங்கள் உள்நாட்டு சந்தையில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது மாத்திரம் உள்நாட்டு சந்தையில் இருந்து கொள்வனவு செய்திருந்த மருத்துவ வழங்கள்களின் மொத்த கிரயம் ரூபா 8,292 மில்லியன் தொகையாக காணப்பட்டது. அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 192 சதவீதத்தினால் அதிகரிப்பு ஒன்றினைக் காட்டியது. மருத்துவ வழங்களை உள்நாட்டு சந்தையில் கொள்வனவு செய்ய நேரிட்டுள்ள காரணத்தினால் 2007 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை

செலவிடப்பட்டிருந்த மேலதிக கிரயம் ரூபா 5,166 மில்லியன் ஆகும். சில மருந்துவகைகள் உள்நாட்டு சந்தையில் அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் விலையை விட வழமையில்லாத அளவில் அதிகரித்திருந்தது.

(இ) அமைச்சின் பெறுகைகள் நடைமுறையில் தாமதம் அல்லது வழங்குனர்களின் தாமதம், மருந்துவகை வழங்குவதில் தாமத்திற்கு காரணமாக இருந்த போதிலும், தாமதம் ஏற்பட்டது எந்தத் தரப்பினால் என இனங்காண்பதற்காக நடைமுறையொன்றினை அமைச்சினால் மீளாய்வாண்டின் போதும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மருந்து வகைகள் வழங்குதல் தாமதம் காரணமாக வைத்தியசாலைகளினால் அவசரமாக உள்நாட்டு கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்படுவதன் காரணமாக உருவாகும் மேலதிக கிரயத்தினை அறவீடு செய்தவற்காக மீளாய்வாண்டின் போதும் நடைமுறையொன்று இனங்கண்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்துடன் மேற்கொண்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கூறிய தாமதங்களின் காரணமாக ரூபா 5,166 மில்லியன் கிரயமொன்று மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த கிரயத்தை அறவீடு செய்வதற்காக அமைச்சுக்கு முடியாதிருந்தது. மேலும், வழங்குனர்களின் தாமதத்தின் காரணமாக உருவாகும் மேலதிக கிரயம் குறிப்பிட்ட வழங்குனர்களிடம் அறவீடு செய்வதற்காக செயலாற்றுகை பிணைமுறி செல்லுபடி ஆவதற்கு முன்னர் அல்லது நாணயப் பத்திரத்தில் வைப்புப் பணத்தை திருப்பி செலுத்துவதற்கு முன்னர் குறிப்பிட்ட தகவல்களை மருத்துவ வழங்கள் பிரிவினால் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பியிருக்கவில்லை.

(ஈ) அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்து மருத்துவ வழங்கல் பிரிவிற்கு அனுப்பப்பட அனைத்து மருத்துவ வழங்கள்களின் தரத்தினை பரிசோதனை செய்வதற்கு நடைமுறை ஒன்று அறிமுகப்படுத்தியிருக்காததுடன் அதற்காக போதியளவு ஆய்வுகூட வசதிகள் மற்றும் போதியளவு பதவியணியினர் இணைக்கப்பட்டிருக்கவில்லை. கொள்வனவு செய்திருந்த மருத்துவ வழங்கல்களின் தரத்தினை பரிசோதனை மேற்கெள்ளாமல் வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்தமையால் மருத்துவ வழங்கல்களின் தரம் தொடர்பாக பிற்காலத்தில் சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன. அச்சந்தர்ப்பத்தில் மாத்திரம் அவை தரப்பரிசோதனை ஆய்வு கூடத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. அதேபோல் மருத்துவ வழங்கல் பிரிவினால் தனியார் வழங்குனர்களினால் பெற்றுக்கொள்ளப்படும் மருந்துகள் உட்பட மருத்துவ வழங்கல் வகைகள், மருத்துவ வழங்கள் பிரிவுக்கு கிடைத்த பின்னர் நோயாளிகளுக்கு வழங்குவதற்கு முன்னர் முன்மாதிரிப் பரிசோதனை ஒன்று மேற்கொள்வதற்கு ஆய்வு கூட வசதிகள் காணப்படவில்லை. இதன் காரணமாக வருடாந்தம் வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படும் மருத்துவ வழங்கல்களில் கணிசமான அளவு தரத்தில் தோல்வியடைந்து காணப்பட்டதென பிற்காலத்தில் வெளிப்படுத்தப்பட்டது என அவதானிக்கப்பட்டது. 2011, 2012, 2014, 2015 மற்றும் 2016 ஆகிய 05 வருட காலப்பகுதியில் தரத்தில் வெற்றியடையாத காரணத்தினால் பயன்பாட்டிலிருந்து அகற்றிய மருந்து வகைகளின் மொத்தக் கிரயம் ரூபா 3,374 மில்லியன் தொகையாக காணப்பட்டது.

(உ) தேசிய மருந்து தர கட்டுப்பாட்டு ஆய்வுகூடத்தினால் மருந்துகள் தொடர்பாக வழங்கப்படும் தரப் பரிசோதனை அறிக்கைகளை அடிப்படையாக வைத்து மருத்துவ வழங்கள் பிரிவினால், வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படும் தரத்தினால் வெற்றியடையாத மருத்துவ வழங்கல்கள் தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் பயன்படுத்துவதை இடைநிறுத்தல் அல்லது பயன்படுத்துவதை விட்டும் அகற்றுவதன் மூலம் தரம் குறைந்த, தரமற்ற மருந்து வகைகளை நோயாளிகளுக்கு வழங்குவதை இடைநிறுத்துதல் எதிர்பார்க்கப்பட்டது. எனினும், மருந்து தரக்கட்டுப்பாடு ஆய்வுகூடத்தில் கொள்திறன் போதியளவாக காணப்படாமை, பரிசோதனை விடயங்களுக்காக நீண்ட காலம் ஒன்று எடுத்தல், கொள்வனவு செய்யும் மருந்து விடயங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டமையால் பரிசோதனை மேற்கொள்ள

வேண்டிய மாதிரிகளின் எண்ணிக்கையும் அதிகமாக இருந்தல் மற்றும் தரத்தினால் வெற்றியடையாத மருந்து வகைகள் தொடர்பாக சுற்றறிக்கைகள் வெளியிடுவதில் தாமதம் காரணமாக குறிப்பிட்ட குறிக்கோள் நிறைவேறுவதில்லை என அவதானிக்கப்பட்டது. மருந்து விடயங்கள் தரத்தினால் வெற்றியடையாதவை என வெளிப்படுத்தப்படும் போது பொருண்மையான சதவீதம் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்தன என வெளியிடப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது தரத்தினால் வெற்றியடையாத பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட (withdraw) 30 வகையான மருத்துவ வழங்கல்களின் மொத்த கிரயம் ரூபா 602 மில்லியன் காணப்பட்டதுடன் அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 258 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் போது அவசர சத்திர சிகிச்சைகளுக்காக பயன்படுத்தும் மருந்துகள், நேரிழிவு நோய்க்கு வழங்கும் மருந்துகள், கர்ப்பிணித் தாய்மாருக்கு வழங்கப்படும் மருந்துகள் கிருமித் தடுப்பு மருந்து (Antibiotics), இரத்தப் பைகள் மற்றும் காயம் கட்டும் துணி வகைகள் உட்பட ரூபா 602 மில்லியனிற்கான தரத்தினால் வெற்றியடையாத மருத்துவ வழங்கல்களை பயன்பாட்டிலிருந்து அகற்றும்படி கட்டளைகள் கிடைக்கும் சந்தர்ப்பத்திலும் ரூபா 525 மில்லியனுக்கான 30 மருத்துவ வழங்கல்கள் விடயங்கள் நோயாளிக்கு வழங்கப்பட்டிருந்தன. அவை தரத்தினால் தோல்வியடைந்த மொத்த மருந்து பெறுமதியில் 87 சதவீதமாக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 377 மில்லியன் பெறுமதியான கிருமி தடுப்பு மருந்துகள் (Antibiotics) நீரிழிவு நோய்க்கு வழங்கும் மருந்துவகை, காக்காய்வலிப்பு, சின்னம்மை நோய்களுக்காக பயன்படுத்தப்படும் மருந்து கர்ப்பிணித் தாய்மாருக்கு வழங்கும் மருந்துகள் மற்றும் காயம் கட்டும் துணி ஆகிய 19 வகையான விடயங்கள் 93 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சிளவு தொகையொன்று நோயாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், நோயாளிகளுக்கு இந்த மருந்துகள் வழங்கிய பின்னர் தரத்தினால் வெற்றியடையாத மருந்துகள் (Quality Fail) என வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(எ) தரத்தினால் வெற்றியடையாத மருந்து வழங்கள்களின் பயன்பாட்டை இடைநிறுத்துவதற்கான கட்டளை பிறப்பிப்பதற்காக மீளாய்வாண்டின் போது சுற்றறிக்கைகளின் மூலம் அறிவுரை வழங்கப்பட்டிருந்தன. அதற்காக கணினி முறைமையினை பயன்படுத்தியிருக்கவில்லை. 57 சந்தர்ப்பங்களில் 16 சந்தர்ப்பங்களில் தரத்தினால் வெற்றியடையாத மருத்துவ வழங்கல்கள் வெளிப்பட்டிருந்த போதிலும், அந்த மருத்துவ வழங்கல்களை இடைநிறுவத்துவதற்காக 20 நாட்கள் முதல் 140 நாட்கள் வரையான வீச்சில் கால தாமதத்தின் பின்னர் கட்டளை குறிப்பிட்ட வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தன. PRONTO கணினி முறை ஊடாக தரத்தில் வெற்றியடையாத விடயங்கள் தொடர்பாக முறைப்பாடு செய்தல் முதல் வழங்குவதை இடைநிறுத்தல் வரை செயல்முறையினை செயற்படுத்தியிருந்தது. இந்த செயல்முறையின் காரணமாக எதிர்காலத்தில் சுற்றறிக்கை வெளியிடுவதில் தாமதங்கள் ஏற்படமாட்டாது என கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த செயல்முறைக்கு ஒரு வருடத்தை அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும், தரத்தினால் வெற்றியடையாத மருந்துகள் தொடர்பாக கட்டளைகள் வழங்கும் இயலுமை PRONTO கணினி முறைமை ஊடாக செயற்படுத்த முடியாது என அவதானிக்கப்பட்டது.

(ஏ) மருத்துவ விநியோகங்களின் தரத்தினை பரிசோதனை மேற்கொள்வதற்காக நிறுவப்பட்டிருந்த தேசிய மருந்துவகை தரப் பாதுகாப்பு ஆய்வுகூடத்திற்காக போதியளவு ஆய்வுகூட வசதிகள் நிறுவிக் கொள்வதற்கு மற்றும் அதிகார சபை ஒன்றாக ஆக்கப்பட்ட பின்னர் போதியளவு பதவியணி ஒன்றினை சேர்ப்பதற்காக அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மருத்துவ வழங்கல்களின் தரம் தொடர்பான பரிசோதனை விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டு அறிக்கைகள் வழங்குவதில் தாமதம்

காரணமாக தரத்தினால் வெற்றியடையாத பயன்படுத்துவதை இடைநிறுத்தப்பட்ட (withhold) ரூபா 5.16 மில்லியன் தொகை பெறுமதியான 07 மருத்துவ வழங்கல் விடயங்கள் பின்னர் எடுக்கப்பட வேண்டிய பரிசோதனை விடயங்கள் தாமதித்த காரணத்தினால் காலவதியாகியிருந்ததென மீளாய்வாண்டின் போது 23 பரிசோதனை விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டது.

(ஐ) மருத்துவ வழங்கள் பிரிவினால் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு கட்டளை அனுப்பப்படும் மருந்துகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும் போது உள்நாட்டு சந்தையில் அவசர கொள்வனவுகள் என ரூபா 59.15 மில்லியன் பெறுமதியான 05 வகையின் மருந்துகள் கொள்வனவு செய்திருந்தது. அந்த மருந்துகள் தரத்தினால் வெற்றியடையாதவை என அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் கூடிய விலைக்கு மருந்துகள் கொள்வனவு செய்து பொதுமக்களுக்கு தட்டுப்பாடு இன்றி மருந்து வகைகள் வழங்குவதற்கு அரசாங்கம் முயற்சி செய்திருந்த போதிலும், அந்த எதிர்பார்ப்பு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஒ) தரத்தினால் வெற்றியடையாத மருத்துவ வழங்குவதை குறைப்பதற்காக வழங்குனர்களை கறைநிரற்படுத்துவதற்கும் மற்றும் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் மீண்டும் பதிவு செய்யும் போது கடுமையாக சட்டங்கள் விதிகள் விதிப்பதற்காக நடவடிக்கை எடுக்கவேண்டுமெனினும், 2014,2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் தரத்தினால் வெற்றியடையாத மருந்துகள் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்ட போது அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக தரத்தினால் வெற்றியடையாத மருந்துகள் வழங்கிய வழங்குனருக்கு அந்த மருந்திற்காகவும், தரத்தினால் வெற்றியடையாத சில மருந்து வகைகளை வழங்கியிருந்த வழங்குனர்களுக்கு வேறு மருந்துகளுக்காகவும் மீண்டும் மீண்டும் கட்டளைகள் வழங்கப்பட்டிருந்தன.

(ஓ) 2014 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான காலப்பகுதியில் மருத்துவ வழங்கள் விடயங்கள் தரத்தினால் தோல்வியடைந்தவை என அறிவித்தது 180 சுற்றறிக்கைகள் வெளியிட்டிருந்ததுடன் அந்த சுற்றறிக்கைகளின் 117 வும் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மருத்துவ வழங்கள்கள் விடயங்கள் தரத்தினால் தோல்வியடைந்தமையின் காரணமாக வெளியிடப்பட்டிருந்தது. அது தவிர 10 சுற்றறிக்கை மற்றும் 08 சுற்றறிக்கைகள் முறையே பாகிஸ்தானிலிருந்து மற்றும் பங்களாதேசத்திலிருந்து இறக்குமதி செய்திருந்த மருத்துவ வழங்கள் விடயங்களின் தரத்தினால் வெற்றியடையாமையால் வெளியிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மருத்துவ வழங்கள் விடயங்களை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்த போது மிகவும் கவனத்துடன் செயலாற்ற வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஔ) 2013, 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளின் போது அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனத்தில் இருந்து கொள்வனவு செய்திருந்த ரூபா 196.67 மில்லியன் பெறுமதியான போலிக் அஸிட் மருந்து தரத்தினால் வெற்றியடையாதவை என வெளிப்படுத்தப்பட்ட பின்னர் 2016 ஆகஸ்ட் 09 திகதி அதனை பயன்படுத்துவதில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. எனினும், அச் சந்தர்ப்பத்தில் 98 சதவீதம் எனப்படும் ரூபா 184.41 மில்லியன் தொகை பெறுமதியான மருந்துகள் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்பட்டு தீர்ந்திருந்தது. குழந்தையின் நரம்பு முறைமை தொடர்பான நோய்களுக்கு ஆளாகும் ஆபத்தினை குறைப்பதற்காக இந்த மருந்து மகப்பேறு சந்தர்ப்பத்திற்கு 03 மாதங்களுக்கு முன்னர் இருந்து மகப்பேறு சந்தர்ப்பத்தில் 03 மாத காலப்பகுதி வரையான கால வீச்சில் வழங்கும் மருந்தாகும். அவ்வாறு வழங்கப்படும் மருந்து தரத்தில் வெற்றியடையாத மருந்து ஒன்றாக இருப்பதன்

காரணத்தினால் நோயுள்ள குழந்தைகள் பிறப்பதன் மூலம் பாரதுரமாக சமூக சிக்கல்கள் ஏற்படக்கூடியதாக இருப்பதுடன் பொதுமக்களுக்கு அரசின் சுகாதார சேவைகள் தொடர்பாக காணப்படும் நம்பிக்கை சீர்கேடான முறையில் தாக்கம் ஏற்படுவதற்கும் இடம் காணப்பட்டது. அதேபோல் கணக்காய்வு திகதியாகிய 2017 ஆகஸ்ட் 15 திகதி வரை இந்த மருந்து இருப்பின் பெறுமதி அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனத்தில் இருந்து அறவீடு செய்திருக்கவில்லை.

(க) சுகாதார பாதுகாப்பு தேவைக்கு பொருத்தமான நேரடியான மற்றும் உயரந்த தரத்தையுடைய மருத்துவ வழங்கல்களை நியாயமான விலைக்கு இறக்குமதி செய்வதற்காக தேசிய மருந்து வகை ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினால் தரத்தை பரிசோதனை செய்த பின்னர் மாத்திரம் மருத்துவ வழங்கல்கள் பதிவு செய்யப்படுவதினால் பதிவு செய்யப்பட்ட மருத்துவ வழங்கல்கள் மாத்திரம் நாட்டிற்கு கொண்டு வருதல் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும், மருத்துவ வழங்கள் பிரிவினால் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் பதிவு செய்யப்படாத வழங்குனர்களுக்கு ஒப்பந்த வேலைகள் வழங்கியிருந்ததுடன் அவ்வாறான கொள்வனவுக்காக மருந்து வகை ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினால் இலங்கை சுங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்காமை கடிதம் (No Objection Letters) வழங்கப்பட்டிருந்தது. 2015 ஆண்டின் போது மருத்துவ வழங்கள் பிரிவிற்கு அவ்வாறான 108 எதிர்ப்பு தெரிவிக்காமைக் கடிதங்கள் மற்றும் 2016 ஆண்டின் போது 134 கடிதங்களும் வழங்கப்பட்டிருந்தன.

(ங) Bupivacain நோய்த் தடுப்புப்பால் மற்றும் நோய்த் தடுப்புப்பால் வழங்கப்படும் வழங்குனர் தேசிய மருந்துவகை ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்திருக்கவில்லை. எனினும், 2015 பெப்ரவரி 19 திகதி அக் கம்பனியில் இருந்து ரூபா 4.93 மில்லியன் பெறுமதியான 12,500 தொகை Bupivacain நோய் தடுப்புப்பால் கொள்வனவு செய்திருந்தது. அந்த நோய் தடுப்புப்பாலை இலங்கை சுங்கத்தில் இருந்து விடுவிப்பதற்காக 2015 பெப்ரவரி 09 திகதி தேசிய மருந்து வகை ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் எதிர்ப்பு தெரிவிக்காமை கடிதமொன்று வழங்கப்பட்டிருந்தது. எனினும், இந்த நோய்த் தடுப்புப்பால் தரத்தினால் வெற்றியடையாதவையாக இருந்தமையால் 2017 பெப்ரவரி 23 திகதி மொத்த இருப்பினையும் பாவனையில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. எதிர்ப்புத் தெரிவிக்காமை கடிதங்கள் வழங்குவதன் மூலம் தேசிய மருந்து வகை ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் பதிவு செய்யப்படாத மருந்து வகை இறக்குமதிக்கு பக்கபலமாக இருப்பதன் காரணத்தினால் தரத்தினால் வெற்றியடையாத மருந்து வகைகள் நாட்டுக்கு கொண்டுவருவதை தடுப்பது அமைச்சுக்கு இயலாமல் உள்ளது.

(ச) தரத்தினால் வெற்றியடையாத மருந்து வகைகள் கிரயம் மற்றும் 25 சதவீத நிருவாகச் செலவுகள் என்பவற்றை வழங்குனர்களிடம் அறவீடு செய்தவற்காக அமைச்சரவை தீர்மானித்திருந்தது. 2013 ஆண்டின் போது தரத்தினால் தோல்வியடைந்த மருந்து வகைகளின் பெறுமதியினை கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. அந்த வருடம் தவிர 2011 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான 05 வருட காலப்பகுதியில் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தில் இருந்து கொள்வனவு செய்திருந்த தரத்தினால் வெற்றியடையாத மருந்து வகைகளுக்காக மருத்துவ வழங்கல் பிரிவினால் ரூபா 893.5 மில்லியன் தொகை மாத்திரம் அரச மருந்தகக் கூட்டுத்தாபத்திலிருந்து அறவிடப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 திகதி வரை மேலும் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 254.7 தொகை ஆகக் காணப்பட்டது. எவ்வாறாயினும் அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் வழங்குனர்களிடம் ரூபா 380.34 மில்லியன் மாத்திரம் அறவீடு செய்திருந்தது. மருந்து வகை களஞ்சியங்கள் மற்றும் எடுத்துக் கொள்வதற்காக பயன்படுத்தும் வாகனம் உரிய நியம தரத்தில் காணப்படவில்லை எனவும் அதன் காரணமாக மருந்துவகைகள் நாட்டிற்கு கொண்டு வந்த பின்னர்

தரத்தினால் தோல்வியடைவதாகவும் வழங்குனர்களினால் குற்றம் சாட்டிருந்த காரணத்தினால் அவ்வாறான குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகிய சில மருந்துகளின் பெறுமதியை அவர்களிடம் அறவீடு செய்வதற்காக முடியாதுள்ளது.

(ஞ) மருத்துவ வழங்கள் பிரிவினால் 03 மாதங்களுக்கான பாதுகாப்பு இருப்பொன்று (Buffer Stock) வைத்திருக்க வேண்டியிருந்த போதிலும், அந்த தேவையினை பூர்த்தி செய்திருக்காத 7223 மருத்துவ வழங்கள் வகைகள் காணப்பட்டதுடன் அவற்றின் இன்றியமையாத 1,607 மருத்துவ வழங்கள் விடயங்களின் இருப்பு சூனியமாக காணபட்டதென கணக்காய்வு பரிசோனையின் போது உறுதிப்படுத்தப்பட்டது.

(ட) இருப்பு சூனியமாக காணப்பட்ட 98 இன்றியமையாத மருந்துகளில் 28 மருந்துகளின் மாதிரி ஒன்றினை பரிசோதனை செய்த போது 2017 ஜுன் 12 ஆம் திகதி அளவில் சிறுநீரக நோய், மூத்திர கோளாறு, மூட்டுகள் சார்ந்த நோய்கள், சழி நோய்களுக்காக இன்றியமையாதவையாகிய மருந்துகள் உட்பட 11 வகையான இருப்புக்கள் மருத்துவ வழங்கள் பிரிவிலும் வைத்தியசாலைகளிலும் சூனியமாக காண்பட்டதென வெளிப்படுத்தப்பட்டது. அதன் காரணமாக நோயாளர்களுக்கு இன்றியமையாத மருந்து விநியோகிக்கும் சேவை விடயங்களை இடையறாது மற்றும் முறைசார் விதமாக பேணப்பட்டிருக்கவில்லை.

(ண) சில மருந்து களஞ்சியங்களில் இடவசதிகள் போதியளவானதாக காணப்பட்டமையால் பாரிய பெறுமதியினையுடைய மருத்துவ வழங்கல்கள், போக்குவரத்து சேவை வழங்குனரிடம் பெற்றுக்கொள்ளாமல் களஞ்சியத்தின் முற்பகுதியில் முற்றத்தல் வைக்கப்பட்டிருந்ததுடன் இடவசதிகள் காணப்பட்ட போது அவற்றை களஞ்சியத்திற்கு ஏற்றுக்கொண்டு பண்டங்கள் பெறுகை பத்திரம் (GRM) வழங்கப்பட்டிருந்தது. களஞ்சிய பொறுப்பாளரினால் ஏற்றுக்கொண்ட மற்றும் ஏற்றுக்கொள்ளாத ரூபா 72 மில்லியன் கிரயத்தையுடைய இருப்புக்கள் களஞ்சிய முற்றத்தில் (கொரிடோவில்) வைக்கப்பட்டிருந்தன என பௌதீக பரிசோதனைகளின் போது உறுதிப்படுத்தப்பட்டது. மேற்கூறிய இருப்பில் 09 வகையான மருந்துகள் செல்சியஸ் 30 பாகையை விடக் குறைந்த உஷ்ணத்தில் வைக்க வேண்டியவை எனினும் செல்சியஸ் 30 பாகையை விட கூடிய உஷ்ணத்துடனான தரைமாடியில் மற்றும் மின்விசிரிகள் ஏதும் காணப்படாத கொரிடோவில் 08 நாட்கள் முதல் 53 நாட்கள் வரையான வீச்சுடன் காலம் வைக்கப்பட்டிருந்தன.

(த) மருத்துவ வழங்கள் களஞ்சியம் குறிப்பிட்ட உஷ்ண நிலையில் பேணப்பட வேண்டியிருந்ததுடன், முகாமைத்துவத்தினால் குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. எனினும், செல்சியஸ் 25 பாகையை விட குறைவான உஷ்ணத்தில் வைக்கப்பட வேண்டும் என பொதிகளில் வெளியில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 104.37 மில்லியன் தொகை பெறுமதியான 23 வகையான மருந்துகள் செல்சியஸ் 25 பாகை விடக்கூடிய உஷ்ணத்தையுடைய களஞ்சியங்களில் 13 நாட்கள் முதல் 730 நாட்கள் வரையான வீச்சிலான காலத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டு விநியோகிக்கப்பட்டிருந்தது. அந்த மருந்துகளிடையே கண் போன்ற மென்மையாக உருப்புக்களுக்கு பயன்படுத்தும் மருந்து, சிறுநீரக நோய், சீசர் அருவைசிகிச்சைக்காக தேவைப்படுகின்ற மருந்துகளும் காணப்பட்டதென பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ந) மருத்துவ வழங்கள் பிரிவிலுள்ள களஞ்சியங்களின் மூலம் நாடு பூராகவும் காணப்படும் 27 பிராந்திய மருத்துவ வழங்கள் பிரிவு(RMSD) களுக்கு விநியோகிக்கப்படும் மருத்துவ வழங்கள் அந்த மத்திய நிலையத்தினால் மாகாண சபைகளின் கீழ் காணப்படும் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார மத்திய நிலையங்களுக்கு மீண்டும் விநியோகிக்கப்படுகின்றன. செல்சியஸ் 25 பாகையை விட குறைவான உஷ்ண

நிலையில் களஞ்சியப்படுத்தப்பட வேண்டிய ரூபா 11.30 மில்லியன் தொகை பெறுமதியான 61 மருத்துவ வழங்கள் விடயங்கள் 04 பிராந்திய மருத்துவ வழங்கள் பிரிவுகளில் செல்சியஸ் 27 பாகை முதல் செல்சியஸ் 38 பாகை வரையான வீச்சு அளவில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. அதேபோல், ரூபா 4.09 மில்லியன் பெறுமதியான 09 மருந்து விடயங்கள் அநுராதபுரம் பிராந்திய மருத்துவ வழங்கள் பிரிவில் இடவசதிகள் காணப்படாதமையால் அநுராதபுரம் வைத்திசாலையின் களஞ்சியங்களுக்கு வெளியே முற்றவெளிகள் மற்றும் கொரிடோவில் களஞ்சியப்படுத்தப்பட்டு காணப்பட்டது. வடக்கு மற்றும் வட மத்திய மாகாணத்தில் 10 வைத்தியசாலைகளில் செல்சியஸ் 25 பாகை விட குறைவாக உஷ்ணத்தில் வைக்கப்பட வேண்டிய மருந்துகள் செல்சியஸ் 34 பாகை முதல் செல்சியஸ் 36 பாகை வரையான வீச்சு உஷ்ணத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. மருத்துவ வழங்கள் பிரிவைச் சேர்ந்த திகன வராப்பிட்டியவில் உள்ள மருத்துவ வழங்கள் உப களஞ்சியத்தில் செல்சியஸ் 25 பாகையை விட குறைந்த உஷ்ணத்தில் களஞ்சியப்படுத்தப்பட வேண்டிய ரூபா 65.37 மில்லியன் தொகை பெறுமதியான 03 வகையான மருந்து விடயங்கள் செல்சியஸ் 25 பாகையை விட கூடிய உஷ்ணத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(ப) அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தில் இருந்து கொள்வனவு செய்திருந்த சில மருத்துவ வழங்கல்கள் சாதாரண உஷ்ணத்தின் கீழ் மருத்துவ வழங்கள் பிரிவிற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்ததுடன் மருத்துவ வழங்கள் பிரிவும் குளிர் அறையில் இடம் காணப்படாமை, மருந்துத் தட்டுபாட்டினை தவிர்த்துக் கொள்வதற்கும் அந்த இருப்புகளை அதே விதமாக பெற்றுக்கொண்டு பொதுவான களஞ்சியத்திலேயே களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. இங்கு மருந்துகளுக்கு சேதம் ஏதும் ஏற்பட்டால் அந்த இருப்பினை மீளளிப்புச் செய்யும் நோக்கத்துடன் குறிப்பிட்ட இருப்பினை மருத்துவ வழங்கள் பிரிவிற்கு பெற்றுக்கொண்டிருந்த போதிலும் குறிப்பிட்ட உஷ்ணத்தில் மருந்துகளை களஞ்சியப்படுத்தப்படாமையால் மருந்துகளின் தரத்திற்கு பாதிப்பு ஏற்படுத்துகின்றது என அவதானிக்கப்பட்டது.

(ம) மருந்து விநியோகிப்பதற்காக பொருத்தமான நடைமுறையொன்று நிறுவப்பட்டிருக்காமை மற்றும் கவனயீனம் காரணமாக தேசிய வைத்தியசாலை, சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை, எதிர்பார்ப்பு வைத்தியசாலை முல்லேரியா, சிலாபம் மற்றும் புத்தளம் ஆகிய வைத்தயசாலைகளுக்கு ரூபா 3.88 மில்லியன் பெறுமதியான மருத்துவ வழங்கல்கள் கண்டி திகன களஞ்சியத்தில் இருந்து வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மேலதிக போக்குவரத்து செலவு ஒன்றினைப் போலவே மருந்துகளின் பண்புகளுக்கு தாக்கங்களை ஏற்படக்கூடியதாகவுள்ளது என அவதானிக்கப்பட்டது.

(ய) வெள்ளப்பெருக்கு போன்ற அவசர அனர்த்த நிலைமையொன்றின் போது நன்கொடையாக கிடைத்திருந்த, பெறுமதிகளை மதிப்பீடு செய்யமுடியாத மருந்து மற்றும் உபகரணங்களுக்காக தேசிய அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் விடுவித்தல் மற்றும் போக்குவரத்து செலவு என பாரிய செலவு ஒன்று மேற்கொண்டிருந்தது. அந்த மருந்து வகைகள் மற்றும் உபகரணங்கள் உரிய முறையில் களஞ்சியப்படுத்தப்படாமை மற்றும் உரிய தரப்பினருக்கு வழங்கப்படாமையின் காரணமாக அவை அழியக்கூடிய நிலையில் காணப்பட்டது. நீதிமன்றச் செயற்பாடுகளின் பின்னர் மருத்துவ வழங்கள் பிரிவிற்கு இலவசமாக கிடைத்திருந்த பெறுமதியினை கணித்திருக்காத பாரிய தொகையான மருந்து வகைகள் 2016 திசெம்பர் 31 திகதி அளவில் காலவதியாகியிருந்தன. அந்த மருந்துகளில் காலவதியாகி பல வருட காலம் கடந்திருந்த சில மருந்துகள் அகற்றப்பட்டிருக்கவில்லை.

(ர) இலங்கை மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் மூலம் அல்லது வேறு ஒரு வழங்குனரினால் வழங்கப்பட்டும் மருத்துவ வழங்கல்கள் பொதிகளில் அரச இலட்சினை அச்சிடப்பட்டிருக்க வேண்டும் என நிபந்தனை ஒன்றினைப் போலவே அறிமுகப்படுத்தியிருந்த உள்ளகக் கட்டுப்பாட்டு உபாயம் ஒன்றாகவும் காணப்பட்டது. அதன் மூலம் அரச களஞ்சியங்களில் காணப்படும் மருந்துகளை முறைகேடாக பயன்படுத்தல் தடுக்கப்படுகின்ற போதிலும் தெரிவு பரிசோதனையின் போது அரச இலச்சினை அச்சிடப்படாதிருந்த கூட்டுத்தொகை ரூபா 97.64 மில்லியன் இற்கான கிரயத்துடனான 04 மருத்துவ வழங்கல்கள் மருத்துவ வழங்கள் பிரிவின் களஞ்சியங்களில் காணப்பட்டன.

(ல) மீளாய்வாண்டின் போது மருத்துவ வழங்கள் பிரிவில் களஞ்சியங்களில் கூட்டுத்தொகை ரூபா 2.54 மில்லியன் தொகைக்கான 05 மருத்துவ வழங்கள் விடயங்கள் காலவதியாகியிருந்ததெனவும் அவற்றில் ரூபா 359,723 தொகை பெறுமதியான 02 மருந்து விடயங்கள் உத்தியோகத்தர்களின் கவனயீனம் காரணமாக காலவதியுள்ளதாக PRONTO கணினி முறையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. அது தவிர 42 வைத்தியசாலைகள் மற்றும் 19 பிராந்திய மருத்துவ வழங்கள் பிரிவுகளில் மீளாய்வாண்டின் போது காலவதியாகியிருந்த மருத்துவ வழங்கல்களின் கூட்டுத்தொகை ரூபா 488.89 மில்லியன் தொகையாயிருந்தது.

(வ) மார்ப்பு புற்றுநோய்க்கான மருத்துவ பெயர் Trantuzumab மற்றும் வர்த்தக பெயர் Herticed ஆகிய மருந்தின் தரம், பாதுகாப்பு மற்றும் வினைத்திறன் (quality, safety, efficancy) தொடர்பாக புற்றுநோய் மருத்துவர்களின் எதிர்ப்பினை பொருட்படுத்தாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 567.7 மில்லியன் தொகை செலவிடப்பட்டு அந்த மருந்தினை கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. தேசிய மருந்து ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் மருந்துகள் மதிப்பாய்வுக்குழுவின் 03 கூட்டங்களில் Hericed மருந்து தொடர்பாக கலந்துரையாடாமல் மற்றும் புற்றுநோய் விஷேடத்துவ மருத்தவர் பங்குபற்றியிருக்காத குழுக் கூட்டமொன்றின் போது இந்த மருந்தின் பதிவு செய்தல் தொடர்பாக விதப்புரை வழங்கப்பட்டிருந்தது. மருந்துகளை மதிப்பாய்வு செய்யும் விடயங்கள் நடைபெறுவதினால் அது திருப்தி அடைந்தால் 2016 பெப்ரவரி மாதம் இறுதியில் பதிவு செய்தலை வழங்குவதற்கு முடியுமென்ற விதப்புரை வழங்கியிருந்த திகதிக்கு 05 நாட்களுக்கு முன்னர் இந்த மருந்திற்கான பதிவு செய்தல் வழங்கப்பட்டிருந்தது.

## 3.20 சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை

சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் கருமங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் அறுவை சிகிச்சை பொருட்களின் களஞ்சியத்தில் நடைபெற்றிருந்த முறைசாராத கொடுக்கல் வாங்கல்கள், கவனயீனத்துடன் செயற்படுதல், ஒழுங்கீனங்கள் மற்றும் திறமையின்மை தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) முறையான அதிகாரத்துடனான விண்ணப்பம் ஒன்றிற்காக மாத்திரம் அறுவை சிகிச்சை பொருட்கள் வழங்கப்பட வேண்டுமெனினும், 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது முறையான அதிகாரமின்றி 115 பொருட்கள் விண்ணப்பித்திருந்த சந்தர்ப்பங்களின் போது கூட்டுத்தொகை

ரூபா 57,599,162 தொகைக்கான அறுவை பொருட்கள் இருதய மார்ப்பு அறுவை சிகிச்சைக் கூடத்தில் பிரதான தாதியிடமும் முறையான அதிகார் இன்றி பொருட்களுக்காக விண்ணப்பத்திருந்த 15 சந்தர்ப்பங்களிலும் ரூபா 21,319,549 தொகை கிரயத்தையுடைய அறுவைப் பொருட்களை இருதய மார்பு அறுவை சிகிச்சைக் கூடத்தின் இருதய அறிவிப்பாளருக்கும் வழங்கப்பட்டிருந்தது.

(ii) அறுவை பொருட்கள் களஞ்சியத்திற்கு கிடைக்கும் அறுவைப் பொருட்களின் இருப்பு உரிய முறையில் பேணப்பட்டு, தேவைக்கு ஏற்ப அறுவை சிகிச்சை கூடத்திற்கு வழங்கப்பட வேண்டியிருந்தது. எனினும் அதற்குப் பதிலாக அறுவை பொருட்கள் களஞ்சியத்திற்கு கிடைக்கும் மொத்த இருப்பினை ஒரே தடவையில் இருதய மார்ப்பு அறுவை சிகிச்சை கூடத்திற்கு வழங்கியிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. அவ்வாறான வழங்கல்களுக்காக வைத்தியசாலையின் பணிப்பாளரின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. 2015 ஜனவரி மாதம் முதல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் 35 சந்தர்ப்பங்களில் மொத்த கிரயம் ரூபா 59,130,738 தொகைக்கான மருத்துவ வழங்கல்கள் பிரிவில் இருந்து கிடைத்திருந்த அறுவை பொருட்களது மொத்த இருப்பும் இருதய மார்பு அறுவை சிகிச்சை கூடத்திற்கு வழங்கியிருந்தது.

(iii) இருப்புக்களை களஞ்சியப்படுத்தும் வசதிகள் இருதய மார்பு சத்திர சிகிச்சைக் கூடத்தில் காணப்படாமையினை கவனத்தில் எடுக்காமல் இருதய மார்பு அறுவை சிகிச்சை கூடத்தின் பிரதான இருதய அறிவிப்பாளரினால், அறுவை பொருட் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த மொத்த இருப்பையும் விண்ணப்பித்திருந்தார். அந்த விண்ணப்பத்தின் மீது களஞ்சியத்தில் இருந்து வழங்கிய இருப்பு இருதய மார்ப்பு சத்திர சிகிச்சை கூடத்திற்கு பெற்றுக் கொடுக்காமல் தொடர்ந்தும் களஞ்சியத்திலேயே தடுத்து வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு 2014, 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது பிரதான இருதய அறிவிப்பாளருக்கு வழங்கப்பட்ட ரூபா 55,354,474 தொகையான கிரயத்தையுடைய அறுவை பொருட்கள் இருப்பில் 59 சதவீதம் எனப்படும் ரூபா 32,550,845 தொகை கிரயத்தையுடைய அறுவை பெருட்கள் இருப்பு இருதய மார்பு அறுவைச் சிகிச்சை கூடத்திற்கு வழங்கப்படாமல் அறுவை பொருட்கள் களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(iv) கிரயத்தினை கணிப்பதற்காக விலைகளை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்த தரத்தினால் வெற்றியடையாத அறுவை பொருட்கள் அறுவை பொருட்கள் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டு காணப்பட்டதென 2016 திசெம்பர் 01 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதிக இருப்பு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. 2013 ஆண்டு முதல் தரத்தினால் வெற்றியடையாதிருக்க இந்த அறுவைப் பொருட்கள் இருப்புக்களை களஞ்சியப்படுத்துவதற்காக அறுவைப் பொருட்கள் களஞ்சியத்தில் பாரிய இடம் பகுதியொன்று பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அவ் இருப்பினை களஞ்சியத்தில் இருந்து மற்றும் ஏடுகளில் இருந்து அகற்றுவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(v) Endotracheal tube அறுவை பொருளின் ரூபா 130,547 தொகை கிரயத்தை உடைய இருப்புப் பற்றாக்குறை ஒன்று மற்றும் ரூபா 177,197 தொகை கிரயத்தையுடைய இருப்பு மிகையொன்று காணப்பட்டதென 2016 திசெம்பர் 23 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதிக இருப்பு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(vi) 2016 திசெம்பர் 01 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதிக இருப்பு பரிசோதனைக்காக Endotracheal tube Plain 2m (SR No. 565165 & 565173) ஆகிய அறுவை பொருட்கள் அடங்கிய காலவதியான இரண்டு பெட்டிகள் களஞ்சியத்திற்கு பொறுப்பான வைத்திய பெண் உத்தியோகத்தரினால் சமர்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அவற்றில் ஒரு பெட்டி 2016 திசெம்பர் 23 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதிக இருப்பு பரிசோதனையின் போது சமர்பித்திருக்கவில்லை. அவ் இடைப்பட்ட காலத்தில் அந்த அறுவைப் பொருட்கள் பெட்டி அகற்றப்பட்டதென உறுதிப்படுத்துவதற்கு எழுத்துமூல சான்று கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

(vii) 2014 நவம்பர் 15 திகதி மருத்துவ வழங்கல் பிரிவில் இருந்து அறுவைப் பொருட்கள் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த ரூபா 645,000 இற்காக மொத்த கிரயத்தை உடைய Vascular graft tube 16 அலகுகள் இருப்பு பதிவேட்டின் பதிவுகளின் பிரகாரம் 2014 நவம்பர் 20 திகதி இருதய மார்பு அறுவை சிகிச்சை கூடத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதே தினம் இருதய மார்பு அறுவை சிகிச்சை கூடத்தினால் அந்த 16 அலகுகளையும் அறுவை பொருட்கள் களஞ்சியத்திற்கு திருப்பி அனுப்பியிருந்தது எனினும் திருப்பி அனுப்பியிருந்த 16 அலகுகளும் அறுவை பொருட்கள் களஞ்சித்தில் இருப்பு பதிப்பீட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(viii) 62 அறுவை பொருட்கள் விடயங்களின் 433,539 அலகுகள் இருதய மார்பக அறுவை சிகிச்சை கூடத்தில் மற்றும் வைத்தியசாலையின் வேறு பிரிவுகளுக்கு விநியோகிக்கப்பட்டதற்கு இருப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தது. எனினும், அவற்றின் அறுவை பொருட்கள் 231,316 அலகுகள் மாத்திரம் இருதய நோய் அறுவை சிகிச்சை கூடம் மற்றும் வேறு பிரிவுகளுக்கு கிடைத்திருந்ததென உறுதிப்படுத்தப்படவில்லை. அதன் பிரகாரம் ரூபா 76,434,142 தொகைக்கான மொத்த கிரயம் அறுவை பொருட்கள் 202,223 அலகுகளின் பற்றாக்குறை ஒன்று காணப்பட்டது.

(ix) அறுவை பொருட்கள் 09 விடயங்களின் 12,471 அலகுகள் இருதய நோய் அறுவை சிகிச்சை பிரிவுக்கு மற்றும் வைத்தியசாலையின் ஏனைய பிரிவுளுக்கு வழங்கப்பட்டதென இருப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தது. 14,958 அலகு அறுவை பொருட்கள் இருதய மார்பு அறுவை சிகிச்சை பிரிவுக்கு மற்றும் வேறு பிரிவுகளுக்கு கிடைத்திருந்தமையினால் ரூபா 380,465 தொகைக்கான கிரயத்தையுடைய அறுவை பொருட்கள் 2,488 அலகுகளின் மிகையொன்று வெளிப்படுத்தப்பட்டது.

(x) 2014 செம்தெம்பர் 22 திகதி முதல் 2015 மார்ச் 16 திகதி வரையான காலப்பகுதியில், மருத்துவ வழங்கல் பிரிவில் இருந்து அறுவைப் பொருட்கள் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த Arterial Catheter இல் 2014 செப்தெம்பர் 22 திகதி இருதய மார்பு அறுவை சிகிச்சை கூடத்திற்கு 1,520 அலகுகள் வழங்கிய பதிவின் மேல் 13,550 அலகுகள் என மாற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2014 செம்தெம்பர் 22 ஆம் திகதி வரை களஞ்சியத்திற்கு கிடைத்திருக்காத 13,550 அலகுகளை அத்திகதியில் வழங்கியவை என பதிவு செய்யப்பட்டிருந்தன. அதே போல் வழங்கியவை என பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா 22,744,452 தொகை பெறுமதியான Arterial Catheter 13,550 அலகுகள் இருதய மார்பக அறுவை சிகிச்சை கூடத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

(xi) வெளி மாகாண வைத்தியசாலைகளில் இருந்து கிடைத்த கோரிக்கைகளின் பிரகாரம், 12 அறுவை பொருட்களை விடயங்களின் 9,016 அலகுகளின் களஞ்சியத்தில் இருந்து வழங்கியிருந்த போதிலும் அந்த இருப்பினை பெற்றுக் கொண்டதனை உறுதிப்படுத்தியிருக்கவில்லை.

(xii) 2016 மார்ச் 18 திகதி Oxygenator 400 அலகுகள் அறுவை பொருட்கள் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்ததுடன் அந்த 400 அலகுகளிற்காக மொத்த இருப்பும் 2016 ஜூன் 15 திகதி ஒரே தடவையில் இருதய அறிவிப்பு பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தது. மீண்டும் 2016 ஜூலை 03 திகதி 140 அலகுகள் அறுவை பொருட்கள் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்தன. அந்த நாள் முதல் 2016 திசெம்பர் 01 திகதி வரை வழங்கல் ஏதும் மேற்கொள்ளப்படாமையினால் அத் திகதியில் உள்ளவாறு Oxygenator பௌதிக இருப்பு மீதி 140 தொகையாக இருக்க வேண்டுமெனினும், அத்திகதியில் உள்ளவாறு Oxygenator 202 அலகுகள் காணப்பட்டன என மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. மேலதிக இருப்பு 62 அலகுகள் தொடர்பாக கணக்காய்வு பிரிவின் உத்தியோத்தர்களினால் வினவிய போது 2016 ஜூன் 15 திகதி வழங்கப்பட்ட 400 அலகுகள் திருப்பி பெறுதல் குறிப்பு (Return Note) ஒன்று வழங்கி 2016 திசெம்பர் 03 திகதி இருப்புடன் கூட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த பாரிய இருப்பு வழங்கல் 06 மாதங்களுக்கு முன்னர் நடைபெற்றிருந்த போதிலும் மீண்டும் (Return Note) ஒன்றின் மூலம் இருப்புக்களுக்கு எடுக்கப்பட்டிருந்தமையால் இந்த 400 அலகுகளும் இந்த காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என தெளிவாகின்றது. அதன் பிரகாரம் 2016 ஜூலை 03 திகதி மீண்டும் 140 அலகுகள் பெற்றுக் கொள்வதற்காக அத்திகதியில் உள்ளவாறு இந்த இருப்பு இல்லை என அறிவிப்பதற்காக வழங்கள் பதியப்பட்டிருந்தன என கணக்காய்வாய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதனை 2016 ஜூன் 15 திகதி வழங்கப்பட்டிருந்த அந்த 400 அலகுகளுக்காக கோரிக்கை அல்லது அங்கீகாரம் இன்மையினால் தெளிவாகுவதுடன் இந்த இருப்பு முறைகேடுகள் ஏற்படுவதற்கான வசதி வாய்ப்புக்கள் மிகையாக உள்ளன என அவதானிக்கப்பட்டது.

(xiii) கராப்பிடிய போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரினால் கடன் அடிப்படையில் Oxygenator 50 அலகுகள் வழங்குமாறு 2016 செப்தெம்பர் 14 திகதி எழுத்து மூலமாக கோரிக்கையின் பிரகாரம் ரூபா 1,762,305 தொகை பெறுமதியான Oxygenator 50 அலகுகள் 2016 நவம்பர் 28 திகதி அனுப்பப்பட்டிருந்தது எனினும், இந்த வழங்கள் தொடர்பாக வழங்கள் கட்டளை ஏதும் வழங்கியிருக்காததுடன் கணினி முறைமையின் மூலம் வழங்கல்கள் பதிவு ஒன்று அல்லது இருப்பு பதிவேட்டில் இருந்து வழங்கள் ஒன்று என பதிவு செய்திருக்கவில்லை. அதே போல் இந்த Oxygenator 50 அலகுகள் கராப்பிட்டி போதனா வைத்தியசாலைக்கு கிடைத்திருக்கவில்லை என அந்த வைத்தியசாலையின் பணியாளரினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(xiv) பிரதான இருதய அறிவிப்பாளரினால் 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது 115 சந்தர்ப்பங்களில் ரூபா 84,245,362 தொகை கிரயத்தையுடைய அறுவை பொருட்களின் இருப்பும், பிரதான தாதி சகோதரியினால் 2016 ஆண்டின் போது 481 சந்தர்ப்பங்களில் ரூபா 52,199,466 கிரயத்தையுடைய அறுவை பொருட்கள் இருப்பும் பிரதான அறுவை பொருட் களஞ்சியத்தில் இருந்து பெறப்பட்டிருந்தது. எனினும் அந்த அறுவை பொருட்களை இருப்பு பெறுகைகளை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(xv) இருதய மார்பக அறுவை சிகிச்சை கூடத்தின் மேற்கூறிய (xiv) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பெற்றிருந்த அறுவை பொருட்களில் 2016 நவம்பர் 09 திகதி வரை 253 வகையான அறுவைப் பொருட்களின் மீதியொன்று மாத்திரம் காணப்பட்டது. அதன் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு மொத்த வழங்கல்களின் கிரயம் ரூபா 136,444,828 ஆக காணப்பட்டது. அவற்றில் 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது உள்நாட்டு சந்தையிலிருந்து கொள்வனவு செய்திருந்த ரூபா 30,884,434 தொகை கிரயத்தை உடைய இருப்பு தவிர மீதி ரூபா 105,560,394 கிரயத்தையுடைய அறுகைப் பொருட்கள் இருப்பினை பயன்பாட்டுக்காக வழங்கப்பட்ட முறை தொடர்பாக பதிவு ஒன்றும் ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அறுவை பொருட்கள் இருப்பினை பயன்படுத்தல் தொடர்பாக முறையான உள்ளகக் கட்டுப்பாடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(xvi) 2014 ஜனவரி 08 ஆம் திகதி முதல் 2016 செப்தெம்பர் 15 திகதி வரையான காலப்பகுதியில் 114 சந்தர்ப்பங்களில் இருதய மார்பக அறுவைச் சிகிச்சைக் கூடத்திற்கு நன்கொடையாக கிடைத்திருந்த போதிலும், அந் அறுவை பொருட்கள் நன்கொடை பதிவேட்டில் உட்படுத்தியிருந்த போதிலும் அதன் பயன்பாடு தொடர்பாக பதிவுகள் ஏதும் செய்திருக்கவில்லை.

(xvii) அறுவை பொருட்கள் களஞ்சியத்தினால் 2011 செப்தெம்பர் 15 திகதி அலகு ஒன்று ரூபா 1,950 வீதம் மொத்தக் கிரயம் ரூபா 292,500 தொகைக்கான Radial Artery Catheter – kit – Salinger Technique – 3Fr 60mm ஆகிய அறுவை பொருட்கள் 150 அலகுகள் உள்நாட்டுச் சந்தையில் கொள்வனவு செய்திருந்தது. இந்த 150 அலகுகள் அறுவை பொருட்கள் 2011 செப்தெம்பர் 16 ஆம் திகதி இருதய மார்பக அறுவை சிகிச்சை கூடத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அவற்றில் 175,500 தொகை கிரயத்தையுடைய 90 அலகுகள் 2016 ஜூன் மாதத்தில் காலவதியாகியிருந்தது. அந்த அறுவை பொருட்கள் ஐந்து வருடகாலம் களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன், தேவையின் அடிப்படையில் உள்நாட்டில் கொள்வனவு செய்வதற்காக முறையான உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறையொன்று கடைபிடித்திருக்கவில்லை. இருப்பு காலவதியாவதற்கு முன்னர் மருந்துகள் முகாமைத்துவ கைநூலில் உள்ள அறிவுரைகளின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. மேலும், இருதய மார்பக அறுவை சிகிச்சை கூடத்தில் உள்நாட்டு கொள்வனவு செய்தல் பதிவு செய்யப்பட்டிருந்த பதிவேடுகளில் இந்த அறுவை பொருட்கள் சிறுவர் நோயாளிக்கு வழங்கப்பட்டன என போலியான பதிவுகள் செய்யப்பட்டு மீதியை சூனியம் ஆக்கப்பட்டிருந்தது.

(xviii) 2013 செப்தெம்பர் 30 திகதி Pressure Infusion Bag – 500 ml ஆகிய அறுவை பொருட்கள் அலகு ஒன்று ரூபா 18,500 வீதம் 25 அலகுகள் ரூபா 462,500 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்து 2013 அக்தோபர் 01 ஆம் திகதி இருதய மார்பக அறுவை கூடத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அவற்றில் மொத்தக் கிரயம் ரூபா 203,500 தொகைக்கான 11 அலகுகள் 2016 ஆகஸ்ட் மாதத்தில் காலவதியாகியிருந்தது. இந்த 11 அலகுகள் அறுவை பொருட்கள் மூன்று வருட காலம் இருதய அறுவை சிகிச்சை கூடத்திற்கு சொந்தமாக களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. தேவையின் அடிப்படையில் உள்நாட்டில் கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்காமையால், இந்த இருப்பும் காலவதியாகியிருந்தது என அவதானிக்கப்பட்டது. மேலும், இருப்பு காலவதியாவதற்கு முன்னர் மருந்துகள் முகாமைத்துவ கைநூலில் காணப்படும் அறிவுரைகளின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(xix) வெளிநாட்டு மருந்துர் குழு ஒன்றினால் கொண்டுவரப்பட்டிருந்த B. Bran TM Certofix Duo Paed S-408 Pediatrics 4Fx3"(8cm) Cannula/Needle 21Gx1.5" Guide wire L=50cm Catheter L=8cm ஆகிய அறுவை பொருட்கள் 160 அலகுகளை பொருத்தமான விதமாக பயன்படுத்துவதற்கு அல்லது தேவையினை கண்டுபிடித்து வேறு ஒரு வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமையினால் 2016 மே மாதம் முதல் காலவதியாகியிருந்தது.

(xx) தேவையினை அடிப்படையாகக் கொண்டு கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் ரூபா 59,634,569 தொகை கிரயத்தையுடைய காலவதியான 28 வகையான அறுவை பொருட்கள் இருதய மார்பக சத்திர கூட தாதி சகோதரியின் களஞ்சியத்தில் மற்றும், இருதய அறிவிப்பாளர் களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(xxi) 2019 பெப்ரவரி மாதத்தில் காலவதியாகும் Romo – Seal/IC Bottle intra costale under water seal granage system – (Pediatric IC Bottle) எனப்படும் 514 அலகுகள் அறுவை பொருட்களின் இருப்பில் ரூபா 228,200 தொகை கிரயத்தையுடைய 163 அலகுகள் பயன்படுத்த முடியாதவாறு சேதமடைந்து இருந்தது என 2016 திசெம்பர் 05 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதிக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(xxii) 2007 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான காலப் பகுதியில் இருதய மார்பக அறுவை சிகிச்சை கூடத்திற்கு கிடைத்திருந்த Custom tubing pack இன் எண்ணிக்கை மற்றும் அந்த காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட Open Heart அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கையுடன் இணக்கஞ் செய்த போது ரூபா 935,911 தொகை கிரயத்தையுடைய Custom tubing pack 108 அலகுகளுக்கான பற்றாக்குறை ஒன்று வெளிப்படுத்தப்பட்டது.

(xxiii) 2017 ஜனவரி 19 திகதி வரை ரூபா 18,579,200 தொகை கிரயத்தையுடைய Cardio Vascular Patch (7.5cm x 5 cm x 0.5mm) 128 அலகுகள் இருதய மார்பக அறுவை சிகிச்சை கூடத்தில் அறுவை பொருட்கள் களஞ்சியத்தில் காணப்பட்டதென அத் தினத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதிக இருப்பு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. 2017 ஏப்ரல் 17 ஆம் திகதி ரூபா 1,616,206 தொகை கிரயத்தையுடைய மேலும் 16 அலகுகள் அறுவை பொருட்கள் களஞ்சியத்திலிருந்து இருதய மார்பக அறுவை சிகிச்சை கூடத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. 2017 மே 17 திகதி அளவில் அறுவை பொருட்களில் 117 அலகுகள் மாத்திரம் அந்த களஞ்சியத்தில் காணப்பட்டது என அந்த தினத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதிக இருப்பு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் 2017 ஜனவரி 19 திகதி முதல் 2017 மே 17 திகதி வரையான காலப்பகுதியில் அந்த அறுவை பொருட்கள் 27 அலகுகள் அறுவை சிகிச்சைகளுக்கு பயன்படுத்த வேண்டியிருந்தது. எனினும், அந்தக் காலப்பகுதியில் ரூபா 1,741,802 தொகை கிரயத்தையுடைய 12 அலகுகள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததென கட்டில் தலைபாகச் சட்டத்தில் ஒட்டி இருந்த Sticker களின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டமையால் ரூபா 2,177,253 தொகை கிரயத்தையுடைய 15 அலகுகள் நோயாளிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(xxiv) 2015 நவம்பர் 27 ஆம் திகதி முதல் 2017 மே 31 திகதி வரை காலப்பகுதியில் மொத்த கிரயம் ரூபா 41,464,800 இற்கான Cardio Membrane (PTFE)(12 cm x 12 cm x 0.1 mm) 150 அலகுகள் அறுவை பொருட்கள் களஞ்சியத்தில் இருந்து இருதய மார்பக அறுவை சிகிச்சை கூடத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. 2017 மே 31 திகதி அளவில் அவற்றில் 94 அலகுகள் மாத்திரம் இருதய மார்பக அறுவை சிகிச்சை கூடத்தில் மீதியாகக் காணப்பட்டது என அத்திகதியில் மேற்கொண்ட பௌதிக இருப்பு பரிசோதனையில் போது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், மேற்கூறிய காலப்பகுதியில் ரூபா 15,480,192 தொகை கிரயத்தையுடைய 56 அலகுகள் அறுவை சிகிச்சைகளுக்காக பயன்படுத்தவேண்டியிருந்தது. எனினும், அக் காலப்பகுதியில் ரூபா 3,040,752 தொகை கிரயத்தையுடைய 11 அலகுகள் மாத்திரம் நோயாளிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தாக, இருதய மார்பக அறுவை சிகிச்சை கூடத்தில் பயன்படுத்தப்படும் நோயாளிகள் சேர்த்தல் மற்றும் வெளியில் அனுப்பும் பதிவேடு, தாதிகளின் பதிவுகள் நோயாளிகளின் தரவுகளின் கீழ் ஒட்டப்பட்டிருந்த பயன்படுத்தப்பட்ட அலகுகள் தொடர்பாக தொகுதி இலக்கங்கள் (Batch No) உடன் Sticker பரிசோதனை செய்த போது வெளிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 12,439,440 தொகை கிரயத்தையுடைய 45 அலகுகளுக்கான பற்றாக்குறையொன்று காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

(ஆ) சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் அறுவைப் பொருட்கள் களஞ்சியத்தில் காணப்பட்ட உள்ளக கட்டுப்பாட்டின் பலவீனங்கள் பின்வறுமாறு ஆகும்.

(i) அறுவைப் பொருட்கள் களஞ்சியத்தில் முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் தொடர்பாக சரியான அறிவுடைய மருந்தாளர் ஒருவர் களஞ்சிய முகாமையாளராக நியமிக்கப்பட்டிருக்காததுடன், களஞ்சிய பொறுப்பாளர் ஒருவரும் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கு பதிலாக பதிவு செய்யப்பட்ட பெண் வைத்திய உத்தியோகத்தர் இருவர் களஞ்சிய பொறுப்பாளர்களாக என போடப்பட்டிருந்த போதிலும், அவர்களுக்கு எழுத்துமூலமாக கடமை சாட்டுதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) அறுவைப் பொருட்கள் களஞ்சியத்திற்குக் கிடைக்கும் அறுவைப் பொருட்கள் சுமார் 4000 எண்ணிக்கையான விடயங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் 2,570 விடயங்கள் மற்றும் 1,430 விடயங்கள் என சுயவிருப்பப்படி பகிந்து கொண்டு களஞ்சிய பொறுப்பாளர்களாக கடமையாற்றிய பெண் வைத்திய உத்தியோகத்தர்கள் இருவரினாலும் நிறுவாகிக்கப்பட்டிருந்தது. தத்தமது பொறுப்புக்கள் என கணித்து அவ் அவ அறுவை பொருள் விடயங்களின் பெறுவனவுகள், வழங்கல்கள் மற்றும் பதிவு செய்தல் ஆகிய அனைத்து விடயங்களும் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களினால் தனியாக மேற்கொண்டிருந்ததுடன் இந்த பெண் வைத்திய உத்தியோகத்தர்கள் இருவரின் கடமை விடயங்கள் பொறுப்புச் சொல்ல வேண்டிய மேல் உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் நடைபெற்றியிருக்கவில்லை. அதன் பிரகாரம் களஞ்சிய விடயங்கள் தொர்பாக முறையான உள்ளக கட்டுப்பாடு ஏற்படக்கூடிய விதமாக வேலைப் பகிர்வு ஒன்று நடைபெற்றிருக்கவில்லை.

(iii) மருத்துவ வழங்கள் பிரிவுக்கு சொந்தமான கணினி வலைபிண்ணல் மூலம் இந்த அறுவை பொருட்கள் களஞ்சியம் உட்பட நாடு பூராகவும் அமைந்துள்ள மருந்து களஞ்சியங்களின் நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுவதினால் முறையான கணினிகள் தொர்பாக அறிவு உடைய உத்தியோகத்தர்கள் இந்த களஞ்சியங்களுக்கு இணைக்கப்பட வேண்டியிருந்தது. எனினும்,

இணைக்கப்பட்டிருந்த இரண்டு உத்தியோகத்தர்களுக்கும் போதியளவு கணினி அறிவு காணப்படவில்லை.

(iv) 2015 நவம்பர் 27 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க (MSMIS) கணினி முறையினை செயற்படுத்துவது தொடர்பாக சுகாதார போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த நிலையியற் கட்டளையின் பிரகாரம், 2016 ஜனவரி 01 திகதி முதல் அத் திகதியில் உள்ளவாறு காணப்படும் அனைத்து இருப்பு விடயங்களையும் கணிப்பீட்டுச் சபை ஒன்றின் மூலம் மெய்மையாய்வு செயற்பட்டு இருப்பு மீதிகள் கணினி முறைக்கு உட்படுத்தப்பட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் கணினி முறைமையின் மூலம் இருப்புகளை வழங்குவதற்கு தேவையான செயல்முறை ஒன்று நிறுவப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 திகதி வரையும் கணினி முறைமைக்கு வெளியே இருப்பு புத்தகங்களில் மூலம் அறுவைப் பொருட்கள் வழங்கப்பட்டிருந்தது.

(v) 2015 நவம்பர் 27 திகதிய 03/2015 ஆம் இலக்க (MSMIS) கணினி முறைமையின் பயன்பாடு தொடர்பாக சுகாதார போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த நிலையில் கட்டளையின் பிரகாரம் கணினி முறையின் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய அறுவை பொருட்கள் பெறுவனவு, வழங்கள் மற்றும் திருப்பிப் பெறல் பத்திரங்கள் பத்திரங்களின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்பிப்பதற்காக ஒழுங்கு முறைப்படி வேறாக கோவை செய்து தேவையான சந்தர்ப்பத்தில் சமர்பிக்கக்கூடிய விதமாக அவை கோவைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(vi) வெளி மாகாணங்களின் வைத்தியசாலைகளுக்கு அறுவைப் பொருட்களை வழங்கும் கட்டளைகள் ஒழுங்கு முறைப்படி பதிவு செய்திருக்காததுடன், பண்டங்களை பெற்றுக் கொண்டதற்காக அனுப்படும் பெற்றுக்கொள்ளல் கட்டளைகள் வழங்கள கட்டளைகளுடன் தொடர்புபடுத்தி கோவைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதேபோல் வெற்று வழங்கள் கட்டளை எந்தக் காரணமும் இன்றி இரத்து செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வழங்கள் கட்டளை மற்றும் பெற்றுக் கொள்ளல் கட்டளைகள் தொடர்பாக முறையான உள்ளகக் கட்டுப்பட்டு செய்முறையொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை.

(vii) மருத்துவ வழங்கல் பிரிவினால் அல்லது உள்நாட்டு சந்தையில் இருந்து அறுவை பொருட்கள் களஞ்சியத்திற்கு கிடைக்கும் அறுவை பொருட்கள் இருப்பு நேரடியாக களஞ்சியப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு கிடைப்பதுடன் கிடைக்கும் இருப்பு எண்ணிக்கை சரியானதான என்பதனை உறுதிப்படுத்துவதற்காக இரண்டாம் தரப்பினரின் சான்றிதழ் ஒன்று பெற்றுக்கொள்ளும் நடைமுறை ஒன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. கணினி முறையில் இருந்து விலகி இருப்புப் பெற்றுக்கொள்ளாமல் மற்றும் வழங்கல்கள் பதிவு செய்யும் முறையை ஒன்று தொடர்ந்தும் காணப்பட்டதுடன் அவ்வாறான இரண்டாம் தரப்பினர்களின் சான்றிதழ் ஒன்றினை பெற்றுக்கொள்ளும் தேவைப்பாடொன்று காணப்பட்டது.

(viii) அறுவை பொருட்கள் களஞ்சியத்திற்கு பொருட்கள் இருப்புக்கள் கிடைத்தல் மற்றும் வழங்கல் பதிவு செய்தல் என்பவற்றை அவ்வப்போது பரிசோதனை மேற்கொள்வதற்கு பிரதான மருந்தாளரின் தொடர்ச்சியான மேற்பார்வையொன்றிற்கு ஆளாகுவதற்கு மற்றும் அனைத்து அறுவை பொருட்களும் அடங்கக்கூடிய விதமாக வருந்தாந்தம் பௌதீக இருப்பு

மெய்மையாதல்கான மேற்கொள்வதற்காக முறையான நடைமுறையொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. இறுதியாக 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நடைபெற்றிருந்த பௌதிக இருப்பு மெய்மையாதல் அனைத்து அறுவை பொருட்களும் உள்ளடங்கக்கூடிய விதமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ix) இருப்பு கட்டுப்பாட்டின் கட்டாயமான பகுதி ஒன்றான இருப்பு மட்டம் உரிய விதத்தில் பேணப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக வருடாந்த இருப்பு தேவைகள் உரிய விதத்தில் மதிப்பீடு செய்யப்படாமை, தேவையற்ற இருப்புக்கள் நீண்ட காலமாக களஞ்சியப்படுத்துவதற்கு தேவைப்படல், அதன் காரணத்தினால் களஞ்சிய கிரயங்கள் அதிகரித்தல், இருப்புக்கள் காலவதியாதல், அரசாங்கப் பணம் தேவையின்றி களஞ்சியங்களில் தடுத்து வைப்பதற்கு தேவைப்படுவதை போலவே இருப்பு தட்டுப்பாடு ஒன்று ஏற்படும் சந்தர்ப்பத்தில் கூடிய விலைக்கு அறுவை பொருட்கள் உள்நாட்டு சந்தையில் அவசர கொள்வனவுகளின் கீழ் கொள்வனவு செய்வதற்கு நேரிட்டிருந்தது.

(x) அறுவை பொருட்கள் வழங்கப்பட்டு இரண்டு வாரங்கள் முதல் ஐந்து மாதங்கள் வரையான வீச்சின் பின்னர் அந்த வழங்கல்களின் கணினி முறைமைக்கு உட்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பங்கள் வெளிபடுத்தப்பட்டன. அவ்வாறான சந்தர்ப்பங்களுக்காக அதிகாரமுடைய உயர்மட்ட உத்தியோகத்தர் ஒருவரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமை அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக கணினி முறைமையின் மூலம் இருப்புக்கள் தொர்பாக தீர்மானம் எடுப்பதற்காக பெற்றுக்கொள்ளும் தகவல்களின் மீது நம்பிக்கை தன்மை இல்லாமல் போகின்றது எனவும், தீர்மாணங்கள் எடுக்கும் உத்தியோகத்தர்களை தவறான பாதையில் இட்டுச் செல்லும் நிலைமை ஒன்று காணப்படுகன்றது என அவதானிக்கப்பட்டது.

(xi) அறுவை பொருட்கள் களஞ்சியத்தினால் பயன்படுத்தப்படும் இருப்புப் பதிவேடுகளின் பதிவுகள் மற்றும் தரவுகள் அடிக்கூடிய மாற்றப்பட்டிருந்துடன் பதிவுகளுக்கு இடையே மற்றும் பக்கத்தின் இறுதியில் புதிதாக பதிவுகள் உட்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2013 ஆண்டு அக்தோபர் மாதத்தின் பின்னர் அனைத்து இருப்பு பதிவேடுகளிலும் இலக்கங்களை மாற்றப்படல், வெட்டப்படல் எப்போதும் செய்யப்பட்டிருந்தமையால் அந்த இருப்பு புத்தகங்களில் காணப்படும் தரவுகள் மற்றும் ஏனைய தகவல்களில் நம்பிக்கை தன்மையையொன்று காணப்படவில்லை.

(xii) வைத்தியசாலையின் பல்வேறு பிரிவுகளில் பயன்படுத்தப்படும் அறுவை பொருட்கள் விண்ணப்பிக்கும் பதிவேடு, அறுவை பொருட்கள் களஞ்சிய உத்தியோகத்தர்களினால் அதிகாரம் ஏதும் இன்றி மாற்றங்கள் செய்யப்பட்டிருந்ததுடன் அப்பதிவேடுகளில் அவ்வவ் பிரிவுகளினால் விண்ணப்பிக்காத அறுவை பொருட்கள் விண்ணப்பிக்காத பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வழங்கள்களும் உட்படுத்தப்பட்டிருந்தது. அதே போல் அந்த பல்வேறு பிரிவுகளினால் விண்ணப்பித்திருந்த அறுவை பொருட்கள் இருப்பு எண்ணிக்கையுடன் தாம் பெற்றுக்கொண்ட இருப்பு எண்ணிக்கையை இணக்கஞ் செய்து பெற்றுக் கொண்டிருக்காத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன என உறுதிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம், அறுவை பொருட்கள் விண்ணப்பிக்கும் பதிவேடுகளில் போலியான பதிவுகள் போடப்பட்டு களஞ்சிய இருப்புப் பதிவேட்டினை சமப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 3.21 உயிர் மருத்துவ பொறியியல் சேவைப் பிரிவு

உயிர் மருத்துவ பொறியல் சேவை பிரிவினால் கொள்வனவு செய்திருந்த உபகரணங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அனைத்து அரச வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்காக மருத்துவ உபகரணங்களின் ஒட்டுமொத்த தேவையினை மதிப்பீடு செய்து ஒரே தடவையாக பெறுகைகள் மேற்கொள்வதன் மூலம் பொருளாதார அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த போதிலும், அதற்கு பதிலாக அவ்அவ் வைத்தியசாலைகளுக்கும் ஏற்பாடுகளின் பங்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டு பிராந்திய பெறுகைகள் குழுவின் மூலம் மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக வசதிகள் செய்யப்பட்டிருந்தது. 2011 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான 06 வருட காலப்பகுதியில் உயிர் மருத்துவ பொறியியல் சேவைப் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்த ஒட்டுமொத்த ஏற்பாடுகளாகிய ரூபா 14,940 மில்லியன் தொகையில் ரூபா 7,363 மில்லியன் ஏற்பாடுகளை வைத்தியசாலைகளுக்கு பகிரப்பட்டிருந்தது.

(ஆ) 2015 நவம்பர் 12 திகதி மற்றும் 2015 திசெம்பர் 10 ஆம் திகதி முறையே ரூபா 26,185,600 தொகை மற்றும் ரூபா 6,546,400 தொகை என கூட்டுத்தொகை ரூபா 32,732,000 தொகை செலவிடப்பட்டு 04 Phaco Emulsifiers உயிர் மருத்துவப் பொறியியல் சேவை பிரிவினால் கொள்வனவு செய்திருந்தது. விலைகூறல்கள் சமர்பித்திருந்த 04 வழங்குனர்களில் அந்த 04 உபகரணங்களுக்காக ரூபா 14,544,000 இற்கான குறைந்த விலை சமர்பித்திருந்த வழங்குனர் அனைத்து தொழில்நுட்ப விவரக்குறிப்புகளையும் நிறைவேற்றியிருந்த போதிலும் விற்பனவின் பின்னர் சேவை மிகவும் பலவீனம் என குறிப்பிட்டு அந்த விலைகூறல்கள் இரத்துச் செய்திருந்தது. ஏனைய நான்கு விலைகூறல்களில் ரூபா 33,400,000 தொகைக்கான கூடிய விலைகூறல்கள் சமர்பித்திருந்த வழங்குனர் அனைத்து விவரக் குறிப்புக்களின் நிறைவேற்றியுள்ளன என குறிப்பிடப்பட்டு தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினால் ஏகமனதாக அந்த விலைகூறலை விதப்புரைத்திருந்தது. எனினும், தெரிவு செய்யப்பட்ட வழங்குனரினால் சமர்பித்திருந்த இயந்திர பெயர்பட்டியலில் (catelogue) தேவையான தொழில்நுட்ப விவரக்குறிப்புக்கள் தெளிவாக காட்டியிருக்கவில்லை. விலைகூறல்தாரர் சமர்பித்திருந்த தொழில்நுட்ப விவரக்குறிப்பு மற்றும் வினவியிருந்த தொழில்நுட்ப விவரக்குறிப்பு உடன் இணங்குவதென தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினால் விதப்புரைத்திருந்த போதிலும், அவ்வாறு விதப்புரைத்த அடிப்படை கணக்காய்விற்கு விளக்கப்படவில்லை. அதேபோல் குறைந்த விலை சமர்பித்திருந்த விலைகூறல்தாரரின் விற்பனவின் பின்னர் சேவை மிகவும் பலவீனம் என உறுதிப்படுத்துவதற்காக எழுத்துமூல சான்றுகள் ஏதும் சமர்பித்திருக்கவில்லை. அதன் பிரகாரம் தெளிவான தன்மையுடனும், பக்க சார்பற்றதாகவும் மற்றும் கவனத்துடனும் பெறுகைகள் விவகாரங்கள் மேற்கொள்ளப்படாத காரணத்தனால் ரூபா 18,856,000 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(இ) 2015 ஜூன் 11 திகதி ரூபா 11,106,000 தொகை செலவிடப்பட்டு உயிர் மருத்துவ பொறியியல் சேவை பிரிவினால் 05 PHOTO THERAPHY UNITS கொள்வனவு செய்திருந்தனர். அந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நறுமண உபகரணங்கள் மற்றும் மருந்து வகை அதிகார சபையின் வழிகாட்டல் கோவையின் 2.5 ஆம் பந்தியின் பிரகாரம், அந்த நிறுவனத்தினால் பெற்றிருந்த வருடாந்தம் புதுப்பிக்கப்பட்ட இறக்குமதி அனுமதிப்பத்திரம் (License to import a

registered Device/s) விலைகூறல் ஆவணங்களுடன் சமர்பித்திருக்காத வழங்குனர் ஒருவரிடம் அவ் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) விலைகூறல்கள் அழைக்கும் போது தேவையினை வழங்குவதற்கான கால வரையறை 4 வாரங்கள் முதல் 6 வாரங்கள் வரையான காலவீச்சாக இருக்க வேண்டுமென குறிப்பிட்டிருந்த போதிலும் தெரிவு செய்யப்பட்ட வழங்குனர் கூறுவிலைகள் சமர்பிக்கும் போது அக்கால வரையறையை 12 வாரங்கள் முதல் 16 வாரங்கள் வரையான கால வீச்சு என குறிப்பிடப்பட்டிருத்தல் தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு கவனம் செலுத்தியிருக்கவில்லை. விலைகூறல் அழைக்கும் போது குறிப்பிடப்பட்ட காலவரையிலேயே பண்டங்கள் வழங்கப்பட வேண்டும் என கட்டளை நிபந்தனை வழங்கியிருக்காமையால் ஒப்பந்த பெறுமதியில் 80 சதவீதத்தை ஆரம்பத்தில் செலுத்தி மீதியான 20 சதவீதத்தை செலுத்தும் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட தண்டப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்படி பொறியியல் (பெறுகைகள்) க்கு 2015 ஜனவரி 30 திகதி அமைச்சு செயலாளர் அறிவுரை வழங்கியிருந்தார். அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் 07 வார தாமதக் காலத்திற்காக அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 777,420 தொகையினை அறவீடு செய்யாமல் ரூபா 11,106,000 தொகையான மொத்தத் பணத்தையும் 2015 ஜூன் 11 திகதி வழங்குனருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(iii) வழங்குனரினால் உயிர் மருத்துவ பொறியியலாளர் சேவை பிரிவிற்கு 05 உபகரணங்கள் வழங்கிய பின்னர் அந்த உபகரணத் தேவை விவரக் குறிப்புக்களுக்கு இணங்க கிடைத்திருந்ததென குறிப்பிட்ட பொறியியலாளரினால் பரிசோதனை செய்திருக்கவில்லை. 2015 மே 21 திகதி அதாவது பண்டங்கள் கிடைத்து 04 மாதங்களுக்கும் பின்னர் உயிர் மருத்துவ பொறியியல் பிரிவின் பணிப்பாளரினால் அந்த உபகரணங்கள் தேவையான விவரக் குறிப்பீடுகளின் பிரகாரம் உரிய முறையில் வழங்கப்பட்டுள்ளனவா என பரிசோதனை செய்து அறிவிக்கும் படி குறிப்பிட்ட பொறியியலாளருக்கு அறிவித்திருந்தார். எனினும் அதன் பின்னர் ஏனும் குறிப்பிட்ட பொறியியலாளரினால் அது தொடர்பாக பரிசோதனை செய்து அறிவித்திருக்கவில்லை. அதன் பிரகாரம், இவ் உபகரணங்கள் தேவையான விவரக்குறிப்புக்களுக்கு இணங்க கிடைத்துள்ளனவா என்பது தொடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(iv) வழங்கியிருந்த பண்டங்கள் தொடர்பாக முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளாமல் நிதிப்பிரமாணம் 137 மற்றும் நிதிப்பிரமாணம் 138 இன் பிரகாரம் கொடுப்பனவுகளை அங்கீகரித்தல் மற்றும் சான்றுபடுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) 2015 நவம்பர் 06 திகதிய அமைச்சு பெறுகைகள் குழுவின் அங்கீரத்தின் பிரகாரம், ஒன்று ரூபா 820,000 வீதம் மொத்தத் தொகை ரூபா 27,060,000 தொகை செலவிடப்பட்டு உயிர் மருத்துவ பொறியியல் சேவைப் பிரிவினால் 33 C-PAP VENTILATORS கள் கொள்வனவு செய்திருந்தது. இந்தக் கொடுக்கல் வாங்கல்களில், விலைகூறல் ஆவணங்கள் மற்றும் தொழில்நுட்ப விவரக்குறிப்பு தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினால் அங்கீகரித்து இருக்கவில்லை எனவும், தொழில்நுட்ப விவரக்குறிப்பு முடிவானது அல்லது முடிவற்றது என வகைப்படுத்தியிருக்கவில்லை எனவும் மற்றும் 7 தொழிநுட்ப விவரக் குறிப்புக்கள் செறிவூட்டப்பட்டிதிருக்காத விலைகோறல்கள் சமர்பித்திருந்த ஒரே விலைகூறல்தாரரிடம் கொள்வனவு செய்திருந்ததென அவதானிக்கப்பட்டது. முறைசாராத பெறுகைகள் நடைமுறையின் பிரகாரம் வெளிப்படையான தன்மையினால் மற்றும் பணத்திற்கான பெறுமதி தொடர்பாக

கவனம் செலுத்தாமல் இந்த பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததென மேலும் அவதானிக்கப்பட்டது.

(உ) 2015 ஆண்டின் போது மொத்தத் தொகை ரூபா 42,369,551 தொகை செலவிடப்பட்டு உயிர் மருத்துவ பொறியியல் பிரிவினால் 06 Eye Lazer உபகரணங்கள் கொள்வனவு செய்திருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இரண்டாவது குறைந்த விலைகூறல்கள் சமர்பித்திருந்த வழங்குனர் அனைத்து விபரக் குறிப்புக்களையும் பூர்த்தி செய்திருந்த போதிலும் விற்பனையின் பின்னர் சேவை மிகவும் பலவீன மட்டத்தில் காணப்பட்டது என குறிப்பிட்டு அந்த விலை கூறலை இரத்துச் செய்திருந்த போதிலும், அதனை உறுதிப்படுத்துவதற்காக எழுத்துமூல சான்றுகள் ஏதும் சமர்பித்திருக்கவில்லை. இரண்டாவது குறைந்த விலையை உடைய விலைகூறலில் குறிப்பிட்டுள்ள பெறுமதியை விட ரூபா 10,558,726 இனால் மிகையான நான்காவது குறைந்த விலை சமர்பித்திருந்த விலைகூறல் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் விதந்துரைக்கப்பட்டிருந்ததுடன் அந்த விலைகூறலில் குறிப்பிட்டுள்ள பெறுமதிக்கான கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் அதற்கு சமமான பெறுமதியினால் அரசுக்கு நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ii) விலைகூறல்தாரர்களுக்கு வழங்கியிருந்த அறிவுரைகளின் பிரகாரம், 02 நாட்கள் தாமத காலத்திற்காக ரூபா 123,722 இற்கான தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்தது. அவற்றில் 01 நாளைக்கான ரூபா 61,861 தொகையான தாமதக் கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் மீதியான ரூபா 61,861 இற்கான தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இலங்கை தேசிய வைத்தியசாலையின் இருதய நோய் அலகிற்காக உயர் மருத்துவ பொறியியல் சேவை பிரிவினால் 2015 ஆண்டின் போது விலை கூறல்கள் அழைக்கப்பட்ட போது முடிவான (Critical) காரணி என கணித்திருந்த 07 விவரக் குறிப்புகள் செரிவூட்டப்பட்டிருக்காத Cath Lab ஒன்று ரூபா 82,669,642 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் முடிவான (Critical) காரணி என கணித்திருந்த 16d இலக்க விவரக் குறிப்பின் கீழ் நிர்மாணித்தல் மற்றும் பொருத்துதல் தொடர்பான மொத்த கிரய மதிப்பீடு ஒன்று, கணியப்பத்திரம் (BOQ) மற்றும் வரைபுகள் தயாரித்திருக்கவில்லை. அதேபோல் அதன் கீழ் உள்ள துணைக்கருவிகள் மற்றும் பொருத்துக்கள் தொடர்பான குறித்தொதுக்கிய விவரக் குறிப்புகளை இனங்கண்டிருக்கவில்லை. அதன் காரணமாக குறைந்த விலைகூறல்தாரரிடமிருந்து முறையே ரூபா 10,946,500 தொகை, ரூபா 4,900,000 தொகை மற்றும் ரூபா 3,250,000 தொகைக்கான பெறுமதிகளின் கீழ் உள்ள விலைகூறல்கள் அந்த விவரக் குறிப்பு தொடர்பான கருமங்களுக்காக சமர்பித்திருந்ததென அவதானிக்கப்பட்டது.

## 3.22 இலங்கை தேசிய வைத்தியசாலையின் இருதய நோய் அலகு

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை தேசிய வைத்தியசாலையின் இருதய அறுவை சிகிச்சை செய்யப்படுகின்ற ‘‘சீ’’ மற்றும் ‘‘ஜே’’ என பெயர் குறிப்பிட்டுள்ள அறுவை சிகிச்சை கூடங்கள் 02 காணப்படுவதுடன் திறந்த, பிரதான, சிறு, மார்பக மற்றும் மீண்டும் திறத்தல், அறுவை சிகிச்சைகள் என இருதய அறுவை சிகிச்சைகள் இந்த 02 அறுவை சிகிச்சை கூடங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த இரண்டு அறுவை சிகிச்சை கூடங்களிலும் பேணப்படுகின்ற அறுவை சிகிச்சை பதிவேட்டின் பிரகாரம் 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது இருதய அறுவை சிகிச்சைகள் முறையே 511 தொகை மற்றும் 279 தொகை செய்யப்பட்டிருந்தன. 2017 ஜனவரி 01 திகதி முதல் 2017 ஆகஸ்ட் 31 திகதி வரையான 08 மாதங்களில் 183 இருதய அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டிருந்தன. 2015 ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2016 ஆண்டின் போது செய்யப்பட்டிருந்த அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை 55 சதவீதத்தினால் குறைந்திருந்தது. 2017 ஆகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில் அதில் முன்னேற்றம் ஒன்று ஏற்பட்டிருக்கவில்லை. 2016 ஏப்ரல் 21 திகதியின் பின்னர் ‘‘ஜே’’ அறுவை சிகிச்சை கூடத்தினை திருத்த வேலைக்காக மூடப்பட்டிருத்தலும் அதற்காக போதியளவு மாற்றுச் செயற்பாடுகள் எடுத்திருக்காமையும் இந்த நிலைமை ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக இருந்துள்ளது.

(ஆ) கணக்காய்விற்கு கிடைத்திருந்த தகவல்களின் பிரகாரம் ‘‘ஜே’’ அறுவை சிகிச்சை கூடத்தை பயன்படுத்தி ஒரு நாளைக்கு 02 அறுவை சிகிச்சைகள் செய்ய முடியும் எனவும், அதனொடு தொடர்புடைய தீவிர சிகிச்சை பிரிவில் காணப்படும் கட்டில்களின் எண்ணிக்கையின் பிரகாரம் அறுவை சிகிச்சைகள் சுமார் 03 மற்றும் 04 செய்யப்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்பட்டதென வெளிப்படுத்தப்பட்டது. 2016 ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களின் போது மாத்திரம் ‘‘ஜே’’ அறுவை சிகிச்சை கூடத்தில் 89 இருதய சத்திர சிகிச்சைகள் செய்யபட்டிருந்ததுடன், அவற்றில் 76 உம் திறந்த இருதய அறுவை சிகிச்சைகளாகும். எவ்வாறாயினும், 2016 ஏப்ரல் 21 ஆம் திகதி ‘‘ஜே’’ அறுவை சிகிச்சை கூடத்தின் திருத்த வேலைகளுக்காக மூடப்பட்ட பின்னர் அதற்கு பதிலாக ‘‘என்’’ அறுவை சிகிச்சை கூடம் இருதய அறுவை சிகிச்சைக்காக பயன்படுத்தியிருந்த போதிலும் 2016 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்கள் அந்த அறுவை சிகிச்சை கூடத்தில் 33 திறந்த இருதய அறுவை சிகிச்சைகள் மாத்திரம் செய்யப்பட்டிருந்தன. 2017 ஆகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில் ஒரு நாளைக்கு செய்யப்பட்ட அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை 01 வரை வரையறுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ‘‘ஜே’’ அறுவை சிகிச்சை கூடம் திருத்த வேலைகளுக்காக மூடப்படல், அறுவை சிகிச்சை எண்ணிக்கை சுமார் 55 சதவீதத்தினால் குறைவதற்கு முக்கிய காரணமாக இருந்தமையால் அதன் திருத்த வேலை மிக விரைவில் பூர்த்தி செய்வதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்த வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை என பின்வரும் விடயங்களின் மூலம் அவதானிக்கப்பட்டது.

(i) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளை கடைபிடிக்காமல் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்தில் மதிஉரையாளர் ஒருவரை தெரிவு செய்திருந்ததுடன், அந்த நிறுவனத்தினால் வரி உட்பட ரூபா 69.88 மில்லியன் தொகை பெறுமதிக்கு பொறியியல் மதிப்பீடு ஒன்று தயாரித்திருந்தது. திருத்த வேலைகள் மேற்கொள்ளும் ஒப்பந்த வேலை 2015 திசெம்பர் 02 திகதியில் அரச அபிவிருத்தி மற்றும் வடிவமைப்பு கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் அதுவரை அந்த

பொறியியல் மதிப்பீடு தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் பரிசோதனை மேற்கொண்டு அல்லது ஒப்பந்த வேலை வழங்குவதற்காக பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்தையும் பெற்றிருக்கவில்லை.

(ii) 2016 மார்ச் 14 ஆம் திகதி ரூபா 69.88 மில்லியனுக்கு இந்த ஒப்பந்த வேலை மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு வழங்குவதற்காக அமைச்சரவை தீர்மானித்திருந்த போதிலும், அது வரை ஒப்பந்தம் வேலை வழங்கப்பட்டு 03 மாதங்கள் கடந்திருந்தது.

(iii) 2016 ஏப்ரல் 21 திகதி திருத்த வேலைக்காக ஒப்பந்தக்காரருக்கு இடத்தை ஒப்படைத்திருந்ததென சான்று காணப்பட்ட போதிலும், 2016 அக்தோபர் 21 திகதி வரை திருத்த வேலையின் செயல் நோக்கை மாற்றுவதற்கும் மற்றும் ரூபா 69.88 மில்லியனிற்கான மதிப்பீட்டை 166 சதவிதத்தினால் அதாவது ரூபா 186.32 மில்லியன் தொகை வரை அதிகரிப்பதற்கும் அமைச்சரவைக்கு விண்ணப்பித்திருந்தது. அதற்காக 2016 நவம்பர் 16 ஆம் திகதி அமைச்சரவையினால் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அமைச்சரவையின் விதப்புரையின் பிரகாரம், ஆரம்ப கிரய மதிப்பீட்டில் ரூபா 116.44 மில்லியன் தொகை கிரய முரண்பாட்டினை தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு ஒன்றின் மூலம் பரிசோதனை செய்து கொள்வதற்கு, அதற்காக குறிபிட்ட பெறுகைகள் குழுவின் அங்கிகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு மற்றும் கிரய மதிப்பீடு தொடர்பான புதிய கட்டணம் நிலையான தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்கு சமர்பித்து அதனது அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக 2017 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) 2017 செப்தெம்பர் 30 திகதி வரை மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்துடன் உடன்படிக்கையொன்று மேற்கொண்டிருக்காததுடன் வேலை பூர்த்தி செய்யபட வேண்டிய நாள் தொடர்பாக குறித்தொதுக்கிய இணக்கமொன்றிற்கு வந்திருக்கவில்லை. 2016 ஏப்ரல் 21 திகதி முதல் கணக்காய்வுத் திகதியாகிய 2017 செப்தெம்பர் 30 திகதி வரை 01 வருடமும் 05 மாதங்களும் கடந்திருந்த போதிலும், திருத்த வேலை பூர்த்தி செய்து கொள்வதற்கு முடியாதிருந்தது. வாயு சீராக்கி முறைமையின் திருத்த வேலைகள் மீதியாகக் காணப்பட்டதென பௌதிக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அதேபோல் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த அறுவை சிகிச்சைக் கூடத்தின் ‘‘ஏ’’ பகுதியில் வர்ணம் பூசப்பட்டிருந்த சாயம் விளகியிருத்தல், கூறையிலிருந்து தண்ணீர் ஒழுகுதல் காணப்பட்டமை, அறுவை சிகிச்சை கூடத்தில் ‘‘பீ’’ பகுதியில் காணப்பட்ட இரண்டு அறைகளின் சுவர்களில் வெளியில் இருந்து தண்ணீர் ஒழுகியிருத்தல், நீர் ஓடக்கூடிய குழாய் ஒன்று உரிய முறையில் தரையுடன் தொடர்புபடுத்தியிருக்காமை போன்ற குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(இ) ‘‘ஜே’’ என்ற அறுவை சிகிச்சை கூடத்திற்கு பதிலாக அறுவை சிகிச்சைகள் மேற்கொள்வதற்காக பயன்படுத்தப்படும் ‘‘என்’’ எனப்படும் அறுவை சிகிச்சைக் கூடம் இருதய அறுவை சிகிச்சைகள் செய்வதற்கு பொருத்தமற்ற அறுவை சிகிச்சைக் கூடம் ஒன்று எனவும் அறுவை சிகிச்சைக் கூடம் மூடப்பட்டுள்ளமையால் தற்போது காணப்படும் நெருக்கடிகள் தொடர்பாகவும் பல சந்தர்பங்களிலும் இந்த அலகின் விஷேடத்துவ வைத்தியர்களினால் வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு அறிவித்திருந்தது. கணக்காய்வுத் திகதியாகிய 2017 செப்செம்பர் 30 திகதி வரையும் இது தொடர்பாக தீர்வு ஒன்று வழங்கியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஈ) கணக்காய்விற்கு கிடைத்திருந்த தகவல்களின் பிரகாரம், 1924 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த இருதய மற்றும் மார்பக அலகினைச் சேர்ந்த 25 ஆம் இலக்க மற்றும் 26 ஆம் இலக்க இரண்டு வாட்களும் நடத்தப்படும் கட்டிடம் மிகவும் சிதையுற்ற நிலையில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

(உ) 2001 ஆகஸ்ட் 31 திகதிய 01/16/2001 ஆம் இலக்க சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் கடமை சாட்டுதல்கள் தொடர்பான பொது சுற்றறிக்கையின் பிரகாரம் இதயத்துடிப்பலை அளவி கலைஞர்கள் கடமையின் பகுதியொன்றான எகோ காடியோ கிரபி பரிசோதனை அந்த கலைஞர்களினால் மேற்கொள்வதற்கு பதிலாக அந்த பிரிவுக்கு இணைக்கப்பட்டுள்ள வைத்தியர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது என வெளிப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக வைத்தியர்கள் நோயாளிகளுக்கு ஈடுபடத்தப்படும் காலம் குறைவடைகின்றது என அவதானிக்கப்பட்டது.

(ஊ) “ஜே” அறுவை சிகிச்சை கூடத்திற்கு தேவையான மதிப்பீட்டு கிரயம் ரூபா 248,000 தொகையின் Worming Machine & External Worming Blanket 01 உம், மதிப்பீட்டு கிரயம் ரூபா 148,500 தொகைக்கான Side Lamp ஒன்றும், மதிப்பீட்டு கிரயம் ரூபா 600,000 தொகைக்கான Defibrillator 01 உம் மற்றும் இருதய நுரையீரலை அறிவிப்பு பிரிவுக்கு தேவையான இரதய நுறையீரல் 02 இயந்திரங்களும் மற்றும் இதயத்துடிப்பலை அளவி கலைஞர் பிரிவுக்காக Defibrillator 02 உம், கெதீடர் ஆய்வுகூடம் II இற்கான மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 200,000 தொகைக்கான Syringe Pump 4 தொகையும் வழங்குமாறு 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது இடையிடையே உயிர் மருத்துவ பொறியியல் சேவை பிரிவிடமிருந்து மற்றும் வைத்தியசாலை அறுவை பொருள் களஞ்சியத்தில் இருந்து கோரியிருந்த போதிலும் 2017 செப்தெம்பர் 30 திகதி வரையும் அந்த உபகரண பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதேபோல் இதயத்துடிப்பலை அளவி பிரிவின் 03 Echo இயந்திரந்தரங்கள், 03 Holter Recorders, 02 Defibrillator, கெதீடர் ஆய்வுகூடத்தில் பயன்படுத்தப்படும் 08 ECG Cable, 01 அலகு Ambulatory Blood Pressure Monitoring Unit 01 மற்றும் கணினி ஒன்றும் குறைவாக காணப்பட்டன என அவதானிக்கப்பட்டது. இந்த தேவையினை பூர்த்தி செய்யாமை நோயாளிகள் உபசரணை தாமதித்தல் மற்றும் எதிர்பார்ப்பு பதிவேடுகளில் கணப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை ஆண்டுதோரும் அதிகரிப்பதற்கு காரணமாக உள்ளது.

(எ) இருதய நோய் அலகினால் பேணப்பட்டு வரும் 17 இருதய நோய் பிணி ஆய்வு நிலையங்களில் ஒரு வருடத்தில் பதிவு செய்யப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்த விகிதாசாரத்தினைக் கொண்டிருந்தது. நோயாளிகளுக்காக மிகவும் குறைந்த மட்டத்தில் வசதிகள் மாத்திரம் காணப்படுவதாகவும், நேயாளிகளுக்கு விதிக்கப்படும் மருந்துகள் பெறுவதற்காக மழை மற்றும் வெயிலுக்கான மறைப்பு ஏதும் இன்றி வரிசைகளில் அனேகமான காலத்தை கழிக்கும் நோயாளிகளும் உள்ளனர் என அவதானிக்கப்பட்டது.

### 3.23 சுற்றாடல் கணக்காய்வு

கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பாக 38 வைத்தியசாலைகளில் இருந்து தகவல் கோறப்பட்டதுடன் அவற்றில் 23 வைத்தியசாலைகளில் இருந்து மாத்திரம் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்தது. அந்த தகவல்களின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகள் மெற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 வைத்தியசாலைகளில் செயற்படுத்தப்படும் வடிகாலமைப்பு முறைமை உரிய முறையில் செயற்படாதிருந்ததுடன், குறிப்பிட்ட நேரங்களில் பராமரிப்பு மற்றும் திருத்த

வேலை விடயங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 13 வைத்தியசாலைகளில் கழிவு நீரினை சுத்தம் செய்வதற்காக பயன்படுத்தப்படும் இரசாயன பொருட்கள் தொடர்பாக குறித்தொகுக்கிய செயல்முறை ஒன்று கடைபிடித்திருக்கவில்லை. 10 வைத்தியசாலைகளின் வடிகாலமைப்பு முறைமையினை மெற்பார்வை செய்வதற்காக அறுதியாக இனங்காணப்பட பதவி ஒன்று காணப்படவில்லை. 13 வைத்தியசாலைகளில் சுத்தம் செய்யப்பட்ட நீரின் தரத்தினை பரிசோதனை மேற்கொள்வதற்கு குறித்தொதுக்கிய நடைமுறையொன்று கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை. 08 வைத்தியசாலைகள் 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டத்தின் 23 பிரிவின் கீழ் வழங்கப்படுகின்ற கழிவுப் பொருட்களை வெளிப்படுத்துவதற்கான சுற்றாடல் சார் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றிருக்காததுடன் 06 வைத்தியசாலைகளில் நீர் மாதிரிகள் சுற்றாடலுக்கு விடுவிக்கக்கூடிய அளவு பொருத்தமானதா என ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றின் மூலம் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் 02 வைத்தியசாலைகளின் நீர் மாதிரிகளை பரிசோதனைக்கு அனுப்பிய நிறுவனம், அனுப்பிய திகதி, அறிக்கையின் தீர்மானம் மற்றும் அறிக்கை திகதி தொடர்புடைய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

(ஆ) 02 வைத்தியசாலைகளில் காலவதியாகிய மருந்துவகைகள் சரியான முறையில் அகற்றுவதற்கு மருத்துவ வழங்கள் பிரிவுக்கு ஒப்படைப்பதற்கு அல்லது சீமெந்து மற்றும் சுண்ணாம்புக் கலவை செய்து கிடங்கு ஒன்றில் போடுவதற்கோ தீ வைப்பதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் 12 வைத்தியசாலைகள் காலவதியான மருந்துகளை அகற்றுவதற்கு கடைபிடிக்கப்படும் நடைமுறை பற்றிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

## 3.24 போலியான மற்றும் தரத்தில் குறைந்த வாசனை பூச்சுவகை உற்பத்திகள் நாட்டிற்கு உட்புகுத்தல்.

1980 இன் 27 ஆம் இலக்க பூச்சு வகைகள், உபகரணங்கள் மற்றும் மருந்துவகைகள் பதிவு செய்தல் சட்டத்தை இரத்து செய்து 2015 ஜூலை 01 திகதி முதல் அமுலுக்கு வருமாறு 2015 இன் 5 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டத்தினை வினைப்படுத்தப்பட்டிருந்தது. பரிகாரம் அல்லாத பூச்சுவகை உற்பத்தி மற்றும் இறக்குமதி தொடர்பாக முடிவாக்கப்பட்ட சட்டத்தில் காணப்பட்ட ஏற்பாடுகள் புதியசட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை. 2015 ஜூலை 01 திகதி முதல் அளவு மற்றும் பெறுமதியினை தீர்மானிக்க முடியாத வாசைன பூச்சுவகைகள் உற்பத்திகள் நாட்டிற்கு இறக்குமதி செய்திருந்த போதிலும் மேறகுறிப்பிட்டவாறு கணக்காய்வு திகதியாகிய 2017 நவம்பர் 30 திகதி வரையும் சட்ட ஏற்பாடுகள் இன்மையால் அந்த இறக்குமதிகள் தொடர்பாக முறையான ஒழுங்குபடுத்தல் ஒன்று ஏற்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் போலியான மற்றும் தரத்தில் குறைந்த வாசனை பூச்சுவகைகளை உற்பத்தி பொருட்கள் நாட்டிற்கு உட்புகுத்தல் மற்றும் அவற்றை பயன்படுத்துவதன் மூலம் நீண்ட காலத்திற்கு ஏற்படக் கூடிய பாரதூரமான சுகாதார அச்சுருத்தல் தொடர்பாக முகாமைத்துவம் முறையான கவனம் செலுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 3.25 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பினவரும் முகாமைத்துவ பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1962 ஆண்டு முதல் 2010 ஆண்டு வரையான 48 வருட காலப்பகுதியில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு சேர்க்கபட்ட நோயாளர்களின் கைவசம் காணப்பட்டு, அவர்கள் சேர்க்கப்பட்ட சந்தர்பத்தில் வைத்தயசாலையில் பொறுப்பில் எடுக்கப்பட்டிருந்த மீளாய்வாண்டு இறுதி வரை உரிமை கோறப்படாத பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு

செய்திருக்காத தங்க ஆபரணங்கள், கடிகாரங்கள், பணம் மற்றும் ஏனைய உபகரணங்கள் வைத்தியசாலை இரும்பு பெட்டியில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. 48 வருட காலங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த நோயாளர்களுக்கு சொந்தமான இந்த ஆதனங்கள் முறைசார் விதமாக பெறுமதி மதிப்பீடு செய்த பின்னர் ஏல விற்பனை மூலம் விற்பனை செய்து அந்த வருமானத்தை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஒவ்வொரு இரத்தத் தொகுதியின் பிரகாரம் இலகுவாக இனங்காணக் கூடிய விதமாக மற்றும் கலவை செய்யபடாமல் இரத்தத்தின் பக்கட்களை களஞ்சியப்படுத்தல் அவசியமாக இருந்த போதிலும் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் AB Rh positive தொகுதி இரத்தப் பக்கட் களஞ்சியபடுத்துவதற்காக ஒதுக்கியிருந்த குளிரூட்டிகளில் அந்த தொகுதி இரத்தப் பக்கட்களுடன் O positive தொகுதி இரத்த பக்கட்களும் கலந்து களஞ்சியப் படுத்தப்பட்டிருந்தது.

பல்வேறு அரசு நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் ஈடுபாட்டுடன் மற்றும் தனிப்பட்ட நன்கொடையாளர்களினால் வழங்கப்படுகின்ற இரத்தம், ஏனைய பிராந்திய வைத்தியசாலைகளுடன் அல்லது வேறு இரத்தம் மாற்றும் நிலையங்களுடன் தொடர்பு கொண்டு அவை காலவதியாக இடம் வைக்காமல் உச்ச மட்டத்தில் பயன்படுத்தக்கூடிய பொருத்தமான நடைமுறை ஒன்று தயாரித்து கடைபிடிக்க வேண்டியிருந்த போதிலும், அநுராதபுர போதனா வைத்தியசலையின் இரத்த வங்கியினால் அவ்வாறு செயற்பட்டிருக்காமையினால் மிகவும் கிராக்கியான இனத்தை சேர்ந்த இரத்தம் காலவதியாகிருந்தது அவதானிக்கப்பட்டது. 2016 ஜூலை 10 திகதி முதல் 2017 ஜனவரி 07 திகதி வரையான காலப்பகுதியில் மாத்திரம் காலாவதியான காரணத்தினால் அகற்றப்பட்டிருந்த 60 லீட்டர்களைக் விடகூடுதலான இரத்த பக்கட்களின் எண்ணிக்கை 201 ஆக இருந்தென தெரிவுப் பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்ட்டது.

(இ) நோய்கள் பரவுவதை தடுக்கும் குறிக்கோளுடன் கண்டி பொது வைத்தியசாலையின் தொற்று நோய் தடுப்பு அலகு ஒன்று நிறுவப்பட்டிருந்த போதிலும், அதன் பங்களிப்பினை அறுதியாக காட்டியிருக்கவில்லை. அந்த அலகினை சேர்ந்த களஞ்சியம் பாதுகாப்பற்றதாகவும், முறைசாரா வீதமாக பேணப்பட்டிருந்ததுடன் களஞ்சியக் கடமை விடயங்கள் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் உத்தியோகத்தர் ஒருவருக்கு சாட்டுவதற்கு பதிலாக விஷேட தரத்தை சேர்ந்த தாதி உத்தியோகததர் ஒருவருக்கு சாட்டப்பட்டிருந்தது. இந்த களஞ்சியத்தில் காணப்பட்ட ஏப்ரன் இருப்பின் ஒரு பகுதியை 2017 பெப்ரவரி 01 ஆம் திகதி தாதி உத்தியோகத்தரினால் அங்கீகாரம் இன்றி வழங்குனர் ஒருவரின் லொறி வண்டிக்கு ஏற்றுவதற்கு முயற்சி செய்த விடயமாக குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டு ஆரம்ப விசாரணை அறிக்கை 2017 மார்ச் 14 ஆம் திகதி சுகாதார அமைச்சின் செயலாளருக்கு சமர்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 நவம்பர் 30 திகதி வரை தொடர்ந்து வரும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஈ) கண்டி பொது வைத்தியசாலையில் பண்டங்கள் கொள்வனவு செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்துவதில் பிரதான பொறுப்பு முற்றாக பிரதான கணக்காளருக்கு சாட்டப்பட்டிருந்தது. அது தவிர பெறுகைகள் குழுவின் அங்கத்தவர் ஒருவராகவும், குறிப்பிட்ட கொடுப்பனவு செய்யும் அதிகாரம் அளிக்கப்பட்ட நபராகவும் மற்றும் வழங்கப்படும் காசோலைகளில் முதலாவது கையொப்பதாரராகவும் அவர் நியமனம் செய்யப்பட்டிருந்தார். அதேபோல் குறிப்பிட்ட காசோலைகளின் இரண்டாவது கையொப்பமிடுவதற்காக கணக்காளரின் நேரடி கண்காணிப்பில் காணப்பட்ட கணக்கு பகுதியின் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்தார்.

(உ) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பட்டப்பின் படிப்பு கல்வி நடவடிக்கைகளுக்காக சம்பளமற்ற விடுமுறையின் கீழ் வெளிநாடு செல்லல் மற்றும் தொழிலுக்காக சம்பளமற்ற விடுமுறையின் கீழ் வெளிநாடு சென்ற பின்னர் மீண்டும் கடமைக்கு சமுகமளிக்காமை அல்லது கட்டாய சேவை காலம் அரசிற்கு சேவையாற்றாமையினால் மேற்கொண்டிருந்த உடன்டிக்கையின் பிரகாரம் 139 வைத்தியர்களிடம் ரூபா 62.71 மில்லியன் தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. அவற்றில் வைத்தியர்களின் தற்போதைய விலாசங்களைத் தேட முடியாமையினால் ரூபா 22.57 மில்லியனும், அறவிடப்பட வேண்டிய பெறுமதியை விடக் குறைவாகக் கணித்திருந்தமையினால் ரூபா 4.35 மில்லியன் தொகையும் அறவிடப்படமுடியாதுள்ளது. வெளிநாடு செல்லும் வைத்தியர்கள் தொடர்பான தரவு முறைமையொன்று நாளதுவரை பேணுப்படுவதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் சேவையை விட்டுச் சென்ற மருத்துவர்கள் தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்காமை ஆகிய முகாமைத்துவ திறயையின்மை காரணமாக மேற்கூறிய பணத்தினை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

## 3.26 சர்ச்சைக் குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

சுகாதார அமைச்சின் சுற்றாடல் சார் மற்றும் தொழில் சுகாதார பகுதியினால் நடத்தியிருந்த அயடின் பற்றாக்குறையான நோய்களைத் தடுத்தல் தொடர்பான நிகழ்ச்சித் திட்டத்திற்கு யப்பான் அரசாங்கத்தின் நன்கொடை ஒன்றாக ரூபா 5.95 மில்லியன் பெறுமதியான உப்பினை அயடின் மயமாக்குவதற்காக பயன்படுத்தப்படும் பொடாசியம் அயடேட் 850 கிலோகிராம் கிடைத்திருந்தது. நாடு பூராகவும் உள்ள அயடின் கலவை செய்யப்படும் உப்பு உற்பத்தியாளர்களுக்கு அந்த பொட்டேசியம் அயடேட் இனை விநியோகிக்காமல் 2015 பெப்ரவரி 27 ஆம் திகதி இலங்கை உப்பு கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த பொடாசியம் அயடேட் இருப்பின் பெறுமதி சுகாதார அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைப்பதற்காக இலங்கை உப்பு கம்பனியின் பொது முகாமையாளர் இணங்கியதாக சுகாதார அமைச்சு செயளாலரினால் 2016 ஜுலை 20 திகதிய கடிதத்தின் மூலம் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார். 2017 நவம்பர் 02 திகதி அயடின் இருப்பு இலங்கை உப்பு கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டு 02 வருடங்கள் 08 மாத காலம் கடந்திருந்த போதிலும் அந்த பணத்தினை உப்பு கம்பனியிடமிருந்து அறவீடு செய்திருக்கவில்லை.

## 3.27 தீர்க்கப்படாதிருந்த கணக்காய்வு பந்திகள்

அமைச்சு தொடர்பான கணக்காய்வு அறிக்கைகளின் அடங்கியிருந்த கணக்காய்வு பந்திகளின் மூலம் சுட்டிக்காட்டியிருந்த பற்றாக்குறைகள் தொடர்பாக அமைச்சினால் சரி செய்திருக்காத பந்திகளுடன் தொடர்பு கீழே தரப்பட்டுள்ளது.

| தலைமை அதிபதியின் அறிக்கையுடன் தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2007 | 6.6(உ)xiii | மருந்துவகைகள் எடுத்துச் செல்லலின் போது ஏற்பட்டிருந்த ரூபா 10 மில்லியன் இற்கான ஒழுங்கினம் தொடர்பாக பொறுப்பு சொல்ல வேண்டிய தரப்பினரை இனங்கண்டிருந்த போதிலும் 2017 அக்தோபர் 30 திகதி வரையும் நட்டத்தை அறவீடு செய்திருக்கவில்லை. |

## 3.28 மனித வள முகாமைத்துவம்

### 3.28.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக் கப்பட்ட பதவியணி யினர் | உள்ளவாறான பதவியணி யினர் | வெற்றிடங் களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக் கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 14,987 | 12,678 | 2,309 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 34,395 | 26,682 | 7,728 | 15 |
| (iii) | இரண்டாம் நிலை | 5,549 | 3,883 | 1,667 | 01 |
| (iv) | ஆரம்ப நிலை | 30,677 | 23,503 | 7,220 | 46 |
| (v) | ஏனைய(அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 2,394 | - | 2,394 |
| | **மொத்தம்** | **85,608** | **69,140** | **18,924** | **2,456** |

பின்வரும் அவதானிப்புகள் மேற் கொள்ளப்படுகின்றன

(அ) ஒவ்வொரு வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பான அங்கிகரிக்கப்பட்ட பதவியணியின் மிகைத்து 3,728 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் இணைக்கபட்டு சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. அவற்றில் நகரங்களை சார்ந்த 16 வைத்தியசாலைகள் மற்றும் 07 நிறுவனங்களில் விஷேடத்துவ வைத்தியர்களின் மிகை 129 தொகையாக இருந்ததுடன், அந்த மிகை 01 முதல் 27 வரை வீச்சொன்றில் காணப்பட்டது. வேறு 21 வைத்தியசாலைகளில் மற்றும் 13 நிறுவனங்களில் காணப்பட்ட விஷேடத்துவ வைத்தியர்களின் பற்றாக்குறை 155 ஆக காணப்பட்டது.

(ஆ) அதேபோல் 60 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் 1,914 மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் அநுராதபுரம், பொலன்னறுவை, யாழ்பாணம் போன்ற கஷ்டமான மாவட்டங்களில் அமைந்துள்ள வைத்தியசாலைகளில் மருத்துவ உத்தியோகத்தர்களின் வெற்றிங்களின் எண்ணிக்கை 16 முதல் 141 வரை வீச்சிலான தொகையாக இருந்தது. எனினும் வேறு 18 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் 119 மருத்துவ உத்தியோகத்தர்கள் மிகையாக காணப்பட்டதுடன் அவற்றில் கொழும்பு, கண்டி மற்றும் குருநாகல் மாவட்டங்களில் அமைந்துள்ள வைத்தியசாலைகளின் மிகை மருத்துவ உத்தியோகத்தர் எண்ணிக்கை 08 முதல் 28 வரை வீச்சு அளவில் காணப்பட்டது.

(இ) அமைச்சின் பல்வேறு நிருவாக விடயங்களுக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த மருத்துவ உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 36 ஆக இருந்த போதிலும், 69 மருத்துவர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் மிகையாகவுள்ள 33 மருத்துவர்களுக்கு போதியளவு வேலை சாட்டுதல் ஒன்று இன்றி அமைச்சின் பல்வேறு பிரிவுகளுக்கு இணைக்கப்பட்டிருந்ததுடன், அவர்களில் 10 பேர் பல்வேறு வைத்தியசாலைகளில் இருந்து சம்பளம் பெறும் மருத்துவ உத்தியோகத்தர்களாகும்.

(ஈ) மருத்தவ உத்தியோகத்தர் வெற்றிடங்கள் காரணமாக 10 மாவட்டங்களை சேர்ந்த 15 ஆரம்ப உபசார அலகுகள் மற்றும் 04 பிராந்திய வைத்தியசாலைகள் மூடப்பட்டிருந்தன.

(உ) சிரேஷ்ட நிலை வெற்றிடங்களில் 15 கணக்காளர்கள் 14 உயிர் மருத்தவ பொறியியலாளர்கள் 78 பல்அறுவை வைத்தியர்கள் மற்றும் 13 மருந்து பகுப்பாய்வாளர்கள் என்பன காணப்பட்டன.

(ஊ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளில் காணப்படாத 07 பதவிகளுக்காக நிரந்தர அடிப்படையில் 62 ஊழியர்களும், தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 2,394 ஊழியர்களும் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(எ) 2014 ஆண்டு முதல் 2016 திசெம்பர் 31 திகதி வரை காலப் பகுதியில் பல்வேறு காரணங்களினால் வேறு வைத்திய சாலைகளுக்கு 03 மாதங்களாக தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்த அநுரதபுர போதனா வைத்தியசலையின் 09 தாதி உத்தியோகத்தர்கள் மற்றும் 13 சுகாதார கனிஷ்ட ஊழியர்கள் குறிப்பிட்ட காலம் முடிவடைந்த பின்னரும் தொடர்ந்து அதே வைத்தியசாலைகளில் கடமைக்கு சென்றிருந்ததுடன் அவர்களின் சம்பளங்கள் மற்றும் படிகள் என ரூபா 9,663,982 தொகை அநுராதபுர போதனா வைத்தியசாலையினால் செலுத்தப்பட்ருந்தது.

### 3.28.2 அதிகாரத்தை மிகைத்து செயற்படுதல்

அரசியலமைப்பின் 57 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகார பகிர்வு தொடர்பாக 2003 ஜுலை 02 திகதி 1295/26 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிஷேட வர்தமாணி மற்றும் 2011 நவம்பர் 25 ஆம் திகதி 1733/52 ஆம் இலக்க அதிவிஷேட வர்தமானியின் மூலம் அரச உத்தியோகத்தர்களை நியமனம் செய்தல், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் மற்றும் ஒழுக்காற்று கட்டுபாட்டு அதிகாரங்கள் திணைக்கள தலைவருக்கு சாட்டப்பட்டிருந்தது. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 2013 அக்தோபர் 24 ஆம் திகதி PSC/EST/7/5/18/2013 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் திணைக்களத் தலைவர் சுகாதார அமைச்சின் செயலாளர் என அறிவித்திருந்தது. அவ்வாறு இருக்கும் போது சுகாதார சேவை பணியாளர் நாயகம் உட்பட சில உத்தியோகத்தர்களினால் தமது கடமை அதிகாரத்தை மிகைத்து காணப்படும் ஏற்பாடுகளுக்கு முரணாக 09 சந்தர்பங்களில் நியமனங்கள், இடமாற்றங்கள், பதவி உயர்வு, ஓழக்காற்றுக் கட்டளைகள் மற்றும் மீண்டும் சேவையில் நிறுவுதல் மேற்கொள்ளப்பட்டிருந்தன என தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.